# மக்கள் விசாரணை®

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-5 இதழ்-9 பிப்ரவரி-2017 மாத இதழ் விலை ₹ 10/-

மக்களின் மனக்குமுறல்

makkalvisaranai@facebook twitter




# உயிரோடு விளையாடாதீர்கள்?

பக்தி, முக்தி மேலும் சக்தியின் உருவம் தான் கோமாதா!



**தானத்தில் சிறந்த தானம் பசுவிற்கு செய்யும் அன்னதானம் மட்டுமே!**

# தனக்கென வாழாது நமக்கென வாழும் பசுக்களுக்கு
# புத்தாண்டு, மாட்டுப் பொங்கல்,
## தங்களின் பிறந்த நாள், திருமண நாள், முன்னோர்களின் நினைவு நாள் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் உணவளித்து மகிழுங்கள்!

கோமாதாவின் பேரருளால் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் அனைத்து செல்வங்களும் கிடைத்திட மனதார பிராத்திக்கின்றோம். கடவுளின் படைப்பில் அவனுக்கு நிகரான படைப்பு என்றால், அது பசு மட்டும்தான். நமக்கு எல்லாவிதமான நன்மைகளையும், பயன்களையும் அளிக்கக்கூடிய சக்தி கோமாதாவில் மட்டும்தான் அடங்கி உள்ளது. இப்படி தனக்கென வாழாத பசுக்கள் இரக்கமின்றி கொல்லப்படுவதை தடுக்க காஞ்சி மகாப் பெரியவா ஆசியோடு பசுமடம் என்ற காப்பகத்தை ஏற்படுத்தி கடந்த 18 ஆண்டுகளாக 120 பசுக்களுக்கு மேல் பராமரித்து வருகிறோம். கோயில்கள் மற்றும் மாட்டுச் சந்தைகளில் ஏலம் விடப்படும் வயதான பசுக்களை பெற்றும், கசாப்புக் கடைகளுக்கு செல்லும் பசுக்களை வாங்கியும் பராமரித்து வருகிறோம். இப்பசுக்களைப் பாதுகாக்க புத்தாண்டு, பொங்கல் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் தங்களால் முடிந்த நன்கொடைகளை தீவனம், பராமரிப்பு மற்றும் மருத்துவ செலவிற்கு வழங்கி, இப்புனிதப் பணியான கோ-சேவையில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம். தாங்கள் கோமாதாவிற்கு செய்யும் சேவை தங்களின் மாதரு, பித்ருக்களுக்கு செய்யும் சேவையாகும். பசுமடத்தை பார்வையிட்ட பின்னும் நீங்கள் உதவி செய்யலாம். பசுக்களை இறுதி காலம் வரை நிம்மதியாகவும், சுகமாகவும் வாழ வைப்பதும், பசுவதையை தடுத்து நிறுத்துவதும், மேலும், பசு வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே எங்களின் முக்கிய நோக்கமாகும்.

**பசுமடத்தில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று 108 பசுக்களுக்கு பாராயணத்துடன் கோபூஜை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.**

## பசுமடத்தில் உள்ள வயதான, ஆதரவற்ற, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்க...

ஒரு பசுவை பராமரிக்க ஒரு வாரத்திற்கு **ரூ.200** அனுப்புவோருக்கு **கோபூஜை செய்த கோமாதா யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஒரு மாதத்திற்கு **ரூ.650** அனுப்புவோருக்கு **பித்தளையிலான பெருமாள் விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க இரண்டு மாதத்திற்கு **ரூ.1,200** அனுப்புவோருக்கு **பித்தளையிலான லெட்சுமி குபேர விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஆறு மாதத்திற்கு **ரூ.3,750** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வெல்லம் செலவு **ரூ.500** அனுப்புவோருக்கு **பித்தளையிலான அஷ்டலெஷ்மி விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் புல் செலவு **ரூ.800** அனுப்புவோருக்கு **பித்தளையிலான சிவன்-பார்வதி விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வைக்கோல் செலவு **ரூ.1,250** அனுப்புவோருக்கு **பித்தளையிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம், யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் தீவனச் செலவு **ரூ.2,600** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான கோமாதா விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத மருத்துவச் செலவு **ரூ.2,900** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான துளசி மாடம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத அகத்தி கீரை செலவு **ரூ.4,300** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான தவழும் கண்ணன்** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க **ரூ.6,600** அனுப்புவோருக்கு **ஒரிஜினல் வலம்புரி சங்கு** அனுப்பி வைக்கப்படும்

## குடும்பம் வாழையடி வாழையாக மகத்தான செல்வச் செழிப்புடனும், மகிழ்ச்சியுடனும் திகழ கோதானம் செய்வீர்!

தாங்கள் விரும்பும் நாட்களில் **நாட்டுப் பசுவும் கன்றும் கோதானம் செய்ய ரூ. 12,500/-.** கோதானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், செய்வினை தோஷம், பித்ரு தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், நாகதோஷம் போன்ற 16 வகை தோஷங்கள் முற்றிலும் விலகும். மேலும் தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிடைக்கவும், கணவன்-மனைவி ஒற்றுமை நிலைக்கவும், புத்ர பாக்கியம் உண்டாகவும், தெய்வீக சக்திகள் பாதுகாப்புடன் சுகப்பிரசவம் நடைபெறவும், தடைப்பட்ட திருமணம் கைகூடவும் கோதானம் செய்வீர். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான சிவன் பார்வதி விளக்கும், பித்தளையிலான கோமாதா மற்றும் மதுரா கிருஷ்ணர் விக்ரஹமும் அனுப்பி வைக்கப்படும்.



பசுமடத்தில் நடைபெறும் கோதானம்

## அனைத்து துன்பங்களும், துயரங்களும் நீங்கி நீண்ட ஆயுள் பெற காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்வீர்!



பசுமடத்தில் நடைபெறும் ரிஷபதானம்

தாங்கள் விரும்பும் நாட்களில் **காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்ய ரூ. 5,000/-.** ரிஷபதானம் செய்தால்... அனைத்து தடைகளும் நீங்கி பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகும், வியாபார தடைகள் அகல, வாகன விபத்தை தவிர்க்க, தடை இன்றி தன வரவு மற்றும் காரிய வெற்றி பெற, தோல்விகள் அகல வெற்றிகள் குவிய, ராஜயோகம் அடைய, கற்ற கல்வியும் தேடிய செல்வமும் என்றும் நிலைத்திருக்க காளைகன்று தானம் செய்வீர். ரிஷபதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்.

## மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் நமது கஷ்டங்களை போக்கி இஷ்டங்களை கொடுக்கும் தேவதைகள் குடிகொள்ளும் கோடி தீப ஆராதனை

தங்களது இல்லங்களில் அமைதியும் ஆனந்தமும் நல்வாழ்வும், முன்னோர்கள், குல தெய்வ ஆசி வேண்டியும் மாட்டுத் தொழுவத்தில் கோடி தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்களின் முன்னோர்கள் நினைவாக அல்லது தங்களின் பிரார்தனைக்கேற்ப தாங்கள் விரும்பும் தேதியில் பசுமடத்தில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் கோமாதாவிடம் பிரார்த்தனை செய்து தேவதைகள் குடிகொள்ளும் தீபம் தீப ஸ்தம்பத்தின் மீது ஏற்றப்படும். ஒரு நாள் தீபம் ஏற்றி வழிபட ரூ. 300 அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான பசுவும் கன்றும் உள்ள விளக்கும், பிரசாதமும் அனுப்பி வைக்கப்படும். இதில் அனைவரும் கலந்து கொண்டு வாழ்வில் ஒளி பெறுவோம்.



மாட்டுத்தொழுவத்தில் நடைபெறும் கோடி தீப ஆராதனை



## குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும். மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கி சீரும் சிறப்புமாய் வாழவைப்பதும் வலம்புரி சங்கே!

வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்று சேரவும், மாணவர்களின் கல்வியறிவு பெருகவும், அடிக்கடி வரும் நோய்களை தடுக்கவும், வீடு மற்றும் வியாபார ஸ்தலத்தில் கண் திஷ்டி நீங்கவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கும் சக்தி கிடைக்கவும், ரியல் எஸ்டேட் மற்றும் பங்கு வியாபாரத்தில் யோகம் பெறவும், சொந்த வீடு வாங்கவும், பூர்வீக சொத்துக்கள் நிலைக்கவும், வாஸ்து குறைகள் நீங்கவும், கடன் பிரச்சனைகள் தீரவும், குடிப்பழக்கம், தீயபழக்கம், தீயசக்தியை நெருங்க விடாமல் தடுக்கவும் ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மணக்கவலை மாற்றும் ஒரிஜினல் வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

**தாங்கள் விரும்பும் நாட்களில் தங்கள் சார்பாக கோபூஜை, கோதானம், சங்கு பூஜை, தீப ஆராதனை செய்து தங்கள் சார்பாக அனைத்து பசுக்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும்**

**நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு வருடத்திற்கான ரூ.365 ஐ கோமாதாவின் பராமரிப்பிற்கு அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான கோமாதா டாலர் மற்றும் கோமாதாவின் வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும்**

பசுவின் ஆகாரத்திற்கும், கோதானத்திற்கும், கோடி தீப ஆராதனைக்கும், வலம்புரி சங்கிற்கும் நன்கொடையை **CHEQUE/DD/MO** ஆக **SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI** என்ற பெயரில், கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பும் போது தங்களின் பெயர், கோத்திரம், நட்சத்திரம், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். நன்கொடை அனுப்புவோருக்கு பிரசாதங்களும், பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும் மற்றும் சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

# பசுமடம்

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)

வயதான, ஊனமுற்ற, நோயுற்ற, ஆதரவற்ற பசுக்களை சுதந்திரமாக பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77.

OFF: 8754 555 555, MADAM: 8754 666 666 | www.shrigosala.com



பசு மடத்தில் உள்ள வயதான பசுக்கள்

# சரியான ஆளுமை இல்லாத கவலை..

## சிறப்புத் தலையங்கம்

கிராமத்தின் அடிப்படை கட்டமைப்பான குளங்கள் தூர் வாருதல், சாலை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் அக்கிராம மக்கள் பங்கேற்பை உறுதி செய்து வேலைக்கான ஊதியமும் வழங்கப்படுகிறது. இதில் பங்கு பெறும் பயனாளிக்கு தினக்கூலியாக அதிகபட்சம் நடைமுறையில் பெரும்பாலானவர்களுக்கு




அதிகபட்சமாக சராசரி கூலி 100 முதல் 120 வரை தான் கிடைக்கிறது என்பதே கள நிலவரம். ஆனாலும் கிடைக்கும் பொருளாதார பலனால் கிராமப்புற மக்களிடையே திட்டத்துக்கு ஆதரவு இருப்பதை மறுப்பதற்கில்லை.

நடப்பு ஆண்டுக் கான பட்ஜெட்டில் 38 ஆயிரம் கோடி ஒதுக்கீடு என அறிவித்து, பின்னர் 47,500 கோடியாக உயர்த்தியதற்கு காரணமே பயனாளிகள் எண்ணிக்கை அதிகரித்தது தான். விவசாய தொழில் அழிவு, நகர்ப்புற வேலை வாய்ப்பு சரிவால் கிராமங்களில் 100 நாள் வேலைக்கு செல்லும் கட்டாயம் ஏற்பட்டது. வரும் நிதியாண்டில் பயனாளிகள் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் தற்போது அறிவிக்கப் பட்டதை காட்டிலும் கூடுதலாக செலவிடும் நிலை வரலாம்.

நிதி ஒதுக்குவதோடு அரசின் பணி முடிய வில்லை. பயனாளிகளுக்கு உரிய ஊதியம் குறித்த காலத்தில் போய் சேருவதை உறுதி செய்ய வேண்டும். நாடு முழுவதும் நடப்பு நிதியாண்டில் பயனாளிகளுக்கு கிடைத்திருக்க வேண்டிய ஊதியம் 3400 கோடி நிலுவையாக உள்ளது. தமிழகத்தில் மட்டும் 72.80 லட்சம் பேர் வேலை பார்த்துள்ளனர்.

இவர்களுக்கு வழங்கியிருக்கவேண்டியதில் 733 கோடி நிலுவையாக உள்ளது. இத்திட்டத்தின் சட்டப்படி வாரம் அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை வேலைக்கான கூலியை முழுமையாக வழங்கவேண்டும். ஆனால் 10 சதவீதத் தினருக்கு மட்டும் தான் அதன்படி கூலி வழங்கப் பட்டுள்ளது. மீதி இருப்பவர்களுக்கு மாத கணக்கில் நிலுவையாக உள்ளது.

பல மாவட்டங்களில் 3 மாதங்களுக்குமேல் கூலி தொகை நிலுவையாக இருப்பதாக கூறி பயனாளிகள் தொடர் போராட்டங்களே நடத்தினர். 500, 1000 நோட்டு மதிப்பிழப்புக்கு பின்னர் தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களிலும் அக்டோபர் முதல் கடந்த ஜனவரி மாதம் வரையிலான காலத்திற்கு கூட முழு கூலி தொகை கிடைக்கவில்லை.

இப்போதும் கிராமப்புற வங்கிகளில் வரிசையில் நிற்பவர்களில் 100 நாள் வேலை திட்ட பயனாளிகளே அதிகம். பண மதிப்பிழப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியாக வங்கிகளில் பணம் பெற விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தான் இதற்கு பிரதான காரணம். தமிழகத்தில் தற்போதைய வறட்சியால் கிராமப்புற கூலி தொழிலாளர்கள் இனி வரும் மாதங்களிலும் இத்திட்டத்தையே நம்பியிருக்கவேண்டும்.

எனவே தமிழகத்திற்கான ஒதுக்கீட்டை அதிகமாக கேட்டு பெறவேண்டும். அதோடு பயனாளிகளுக்கு முழுமையாக கூலி கிடைப்பதை உறுதி செய்வதும் அரசுகளுக்கு அவசியம்.

ஆனால் தமிழ்நாட்டின் நிலைமையே தலைகீழாக இருக்கிறது. உறுதியான, நேர்மையான ஆளுமைகள் அமையும்போதுதான் கிராம புறத்தின் வளர்ச்சிகள் மேம்படும்.

**- ஆசிரியர்**



# மோடி மஸ்தான் வேலை மக்களுக்குத் தெரியும்..!

தமிழகத்தின் முதலமைச்சராக பதவி யேற்க உள்ளார் சசிகலா. ஜெயலலிதா வின் மறைவுக்குப் பிறகு அதிமுக பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட வர், தற்போது சட்டமன்றக் கட்சி தலை வராகவும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் முதல்வர் ஓ.பி.எஸ் முன்மொழிய, மற்ற உறுப்பினர்கள் அனைவரும் வழிமொழிய... ஒருமனதாக சசிகலாவுக்கு முடிசூட்ட முடிவு செய்திருக் கிறார்கள்.

கட்சி, ஆட்சி இரண்டிலுமே அதிகாரம் ஒருவர் கையில் இருந்தால் தான் அரசு இயந்திரம் சிக்கலின்றி இயங்கும் என்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்கிறார்கள். ஓ.பி.எஸ் தலைமையிலான ஆட்சி ஒழுங்காகத்தானே போய்க் கொண்டி ருந்தது. எதற்காக அவரை ராஜினாமா செய்ய வைத்து, சசிகலாவை முதல்வராக்க வேண்டும் என்ற கேள்வி எழுந்துள்ளது. இது அவர்களின் உள்கட்சி விவகாரம் என்றாலும், ஒட்டுமொத்த தமிழகத்தின் நலனையும் கருத்தில் கொண்டால் இந்த கேள்வியில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகிறது.

கட்சித் தொண்டர்கள் மற்றும் பொது மக்களிடம் நிலவும் அதிருப்தியையும் புறக்கணித்துவிட முடியாது. நிர்வாகி களையும், எதிர்ப்பாளர்களையும் சரிக் கட்டிவிட்டால் போதுமா? சொத்துக் குவிப்பு வழக்கு உள்பட பல்வேறு வழக்கு களில் தீர்ப்பை எதிர்நோக்கியுள்ள நிலை யில், கொஞ்சம் பொறுமையாக இருந்திருக் கலாமோ என்ற எண்ணம் எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. ஆறு மாதத் திற்குள்ளாக ஏதாவதொரு தொகுதியில் போட்டியிட்டு மக்களின் ஆதரவைப் பெற் றால் மட்டுமே முதல்வராக நீடிக்க முடியும். மக்கள் இதற்கு தீர்ப்பு எழுதுவார்கள்.

ஜெயலலிதா வழியில் மக்களுக்காகவே அதிமுக ஆட்சி செயல்படும் என்று சம்பிர தாயமான வாக்குறுதிகளை அள்ளித் தெளித்துவிட்டு, வழக்கம்போல அடிமைகள் சாம்ராஜ்யமாக கட்டிக் காக்க முயற்சிப்பதும் தற்கொலைக்கு சமம்.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என்ற மிகப் பெரிய ஆளுமைகள் வரலாறாகிப் போன நிலையில், அதிமுகவின் எதிர்காலம் கேள்விக் குறியாகி இருக்கிறது. மத்திய அரசின் சர்ச்சைக் குரிய ஜிஎஸ்டி, உதய் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்த விதமும் கூட பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக நடந்த மாணவர்கள் போராட்டத்தில் போலீசார் நடத்திய வன்முறை நாடகம் எல்லாம் தற்காலிகமாக மறந்து போயிருந்தாலும் இடைத்தேர்தல், உள்ளாட்சித் தேர்தலை எதிர்கொள்வது அதிமுகவுக்கு அமில சோத னையாகவே அமையும். வாக்கு சேகரிப்ப தற்காக மக்களை நேரில் சந்திக்கும்போது இந்த கேள்விகளுக்கெல்லாம் நிச்சயம் பதில் சொல்ல வேண்டியிருக்கும். **- ராம்குமார்**



# உயிரோடு விளையாடாதீர்கள்?

தமிழகம் முழுவதும் தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் சில நாட்களுக்கு முன் தொடங்கியிருக்கின்றன. கடந்த சில வாரங்களாக இந்தத் தடுப்பூசிகள் தொடர்பாக சமூக வலைதளங்களில் வலம் வந்துகொண்டிருக்கும் விவாதங்களும் சில தவறான பிரச்சாரங்களும் பொது மக்களிடையே, குறிப்பாக சிறார்களை வைத்திருக்கும் இளம் பெற்றோரிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தின. இந்தத் தடுப்பூசிகள் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாகவே தடுப்பூசியை ஒரு சர்வதேச சதியாகச் சித்திரிக்கும் அளவுக்கு நிலைமை மோசமானது.

தமிழகம், கர்நாடகம், புதுச்சேரி, கோவா, லட்சத்தீவுகள் உள்ளிட்ட 5 மாநிலங்களில் பிப்ரவரி 6 முதல் 28 வரை 9 மாதம் முதல் 15 வயது வரையிலான சுமார் 1.8 கோடிச் சிறார்களுக்கு ரூபெல்லா, தட்டம்மை நோய்களுக்கான தடுப்பூசி அரசு சார்பில் போடப்படுகிறது. உயிரிழப்பை ஏற்படுத்தும் அளவுக்கு மோசமான இந்த இரண்டு நோய் பாதிப்புகளுக்கும் சிகிச்சை அளிக்கும் மருந்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

எனவே, இந்த நோய் பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் இந்தத் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. 'இவை பாதுகாப்பானவை; இவற்றால் எந்தவித ஆபத்தும் இல்லை' என்றும் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. இவற்றைத்தான் ஆட்டிஸம் பாதிப்பு ஏற்படுத்தும் அளவுக்கு ஆபத்தானவை என்கிறார்கள் சிலர்.

உலகில் எல்லா மருத்துவ முறைகளிலும் பல அனுகூலங்களும் உண்டு; சில சிக்கல்களும் உண்டு. ஆங்கில மருத்துவம் ஏன் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்றால், அது உடனடிப் பலன் அளிப்பது மட்டும் அல்லாமல், அதன் சிகிச்சைகளும் மருந்துகளும் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்ட பின், கொண்டுவரப்படுகின்றன என்பதும் அவற்றின் பலன்கள், பக்கவிளைவுகள் இரண்டையும் அவை வெளிப்படையாகத் தெரிவிக்கின்றன என்பதாலும்தான்.

மனிதகுலத்தைப் பல கொள்ளை நோய்களிலிருந்து விடுவித்த தூதன் தடுப்பூசி. கோடிக்கணக்கான சிசுக்களிடம் ஒரு தடுப்பூசியைக் கொண்டு வரும் முன், ஒரு அரசும் சுகாதாரத் துறையும் எவ்வளவு யோசித்துச் செயல்படும் என்பதை விளக்க வேண்டியதில்லை. அதேசமயம், மக்கள் தரப்பிலிருந்து எழுப்பப்படும் சந்தேகங்களைக் குறையாகப் பார்க்கவும் ஏதும் இல்லை. ஏனென்றால், மருத்துவம் ஒரு சந்தையாக்கப்படவும் மருந்துகள் பண்டமாக்கப்படவும் இதே ஆங்கில மருத்துவ முறைதான் வழிகோலியது என்பதையும் மறந்துவிடலாகாது.

ஆக, அரசுத் தரப்பு இதுகுறித்துப் பேச வேண்டும். மக்களின் சந்தேகங்களுக்கும் விமர்சனங்களுக்கும் விரிவான பதில் அளிக்க வேண்டும். மேலும், தடுப்பூசி போட்டுக்கொள்பவர்களில் அரிதாக லட்சத்தில் ஒருவருக்குப் பாதிப்பு ஏற்பட்டாலும், அந்தப் பாதிப்பை அரசு தன் பொறுப்பில் ஏற்றுக்கொள்ளும் வழக்கம் இதுவரை நம் நாட்டில் இல்லை. இந்நிலையை மாற்ற வேண்டும். பாதிக்கப்படும் குழந்தைகளுக்கான சிகிச்சை, பாதிப்புக்கான இழப்பீடு ஆகியவற்றை அரசு ஏற்க வேண்டும்.

இப்படியான விவகாரங்களில் பொதுச் சமூகத்துக்கும் பொறுப்பு இருக்கிறது. சமூக வலைதளங்கள் கையில் இருக்கின்றன என்பதற்காகப் பொறுப்பற்ற வகையில், விஷத் தகவல்களைப் பொதுவெளியில் பரப்புவது சமூகக் குற்றம். சிசுக்களின் உயிரோடு விளையாடுவது நம் சந்ததியோடு விளையாடும் அபாயமான ஆட்டம்!


**– ஆ. மவுரியன்**

மனிதன் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்கள் உயிர்வாழ முக்கிய மாகக் கருதப்படும் நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய வற்றில் மாற்றம் ஏற்படாத வரை உயிரினங் களுக்கு பாதிப்பு இல்லை.

ஆனால், பருவநிலையில் மாற்றம் ஏற்படும்போது மனிதன் உள்ளிட்ட உயிரி னங்கள் அவற்றுக் கேற்ப மாற வேண்டியுள் ளது. விஞ்ஞான வளர்ச்சியால் உணவு உற்பத் தியில் பெரிதாக எதுவும் செய்ய முடியாத மாதத்தில் சாகுபடியையும் தை மாதத்தில் அறுவடையையும் செய்வர்.

இந்நிலை முற்றிலும் மாறி, பருவநிலை மாற்றத்தால் பருவ மழை எப்போது பெய்யும், என்ன பயிரிடுவது என்ற குழப்பத் திலேயே விவசாயிகள் உள்ளனர். பருவ நிலை மாற்றத்தின் காரணமாக மழை பெய்யக் கூடிய பருவத்தில் மழை பொய்த்துப் போவதும் மழை பெய்யாத காலங்களில் மழை பெய்து விவசாயத்தைப் பாதிப்பதும்

# புவியியல் ஆய்வகம் எச்சரிக்கை..!



தால், உணவு உற்பத்திக்கு விவசாயத்தையே சார்ந்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

வேளாண் விளைபொருள் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிப் பது பருவநிலையே. பருவநிலை மாற்றத்தின் காரணமாகவே அதிக அளவு மழையும், வறட்சியும் ஏற்படு கிறது. இந்த ஆண்டு பருவமழை பொய்த்த தால் குறுவை, சம்பா சாகுபடியுடன் மானா வாரி சாகுபடியும் பொய்த்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகள் ஆடி



தற்போது நடை பெறுகிறது.

தமிழகம் முழுவதும் பெரும்பாலான மாவட் டங்களில் வறட்சி பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், டெல்டா மாவட்டங்களிலும், அரி யலூர் உள்ளிட்ட மத்திய மண்டல மாவட்டங்களி லும் தற்போது மழை பெய்து வருவது பருவ நிலையில் மாற்றம்

# அழியும் அபாயத்தில் விவசாயம்

ஏற்பட்டுள்ளதோ என்ற அச்சத்தை விவசாயி களுக்கு ஏற்படுத்தி யுள்ளது.

பருவநிலை மாற்றத்தின் காரணமாக விவசாயம் பாதிக்கப்படுவது டன், அதைச் சார்ந்த தொழில்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி யிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

ஐப்பசி மாதம் அடைமழைக் காலம் என்னும் நிலை மாறி, தற்போது தை மாதத் தில் மழை பெய்து வருவது, இயற்கையில்



மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது என்றே கூறலாம். தற்போது, புயல் வந்தால் மட்டுமே மழை பெய்யும் என்ற கருத்து மக்களிடம் உள்ள நிலையில் இந்த மாற்றம், எந்தப் பட்டத்தில் எதைச் சாகுபடி செய்வது என்ற கேள்வியும் குழப்பமும் விவசாயி களிடம் உள்ளது.

இதுகுறித்து அரியலூரைச் சேர்ந்த முன் னோடி விவசாயி ராமையன் கூறியபோது,

"ஆடியில் பெய்யும் மழை விவசாயத் துக்கு உயிரூட்டும் வகையில் அமையும். ஆனால், தற்போது அனைத்தும் மாறிவிட் டது. பருவநிலை மாற்றத்துக்கு ஏற்றாற்போல விவசாயிகளும் மாற வேண்டியுள்ளது. எனவே, இந்த பருவநிலை மாற்றத்தை அறிவியல் விஞ்ஞானிகள் கணித்து முன் கூட்டியே விவசாயிகளுக்கு அறிவித்தால் அதற்கு ஏற்றவாறு பயிர் சாகுபடி செய்ய முடியும்" என்றார்.

புவியியலாளர் எம்.சந்திரசேகர் கூறியபோது,

"ஆடி மாதத்தில் விதைக்க வேண்டும் என்ற நிலை மாறி, தற்போது தை மாதத்தில் மழை வருவது மிகப்பெரிய மாற்றமாகவே பார்க்கப்படுகிறது. பனி உருகி கடல்மட்டம் உயர்ந்து கடல் உள்வாங்குவதும், வெளி வாங் குவதும், கண்டங்கள் பலவகையாக பிரிவதும் தொடர்வதால் பூமியின் தட்பவெப்ப நிலை தொடர்ந்து மாறி வருகிறது. வரும் காலங் களில் பருவநிலையில் இன்னும் அதிக மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

அதனால் விவசாயம் பெருமளவு பாதிக் கப்படவும் வாய்ப்பு உள்ளது. அதனைத் தவிர்க்க அறிவியலாளர்கள், வேளாண் வல்லுநர்கள், புவியியலாளர்கள் இணைந்து, பருவ நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும். பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ற பயிர்களை, அதற்கு உரிய காலத்தில் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்" என்றார்.

**- இர்வின்**

# கொள்கையில் உறுதியோடு வென்று காட்டிய இளைஞர்கள்

மெரினா உட்பட எங்கெல்லாம் ஜல்லிக்கட்டுக்காக போராட்டங்கள் நடக்கிறதோ அங்கெல்லாம் போராட்டத்தை வாபஸ் பெறுகிறோம் என்பதை மாணவர்கள், இளைஞர்கள் ஒப்புதலோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் கவுதமன்.

ஜல்லிக்கட்டுக்கு இருந்த தடையை நீக்க வேண்டும் என்று, ஒரு வாரம் மெரினா கடற்கரையில் நடைபெற்றுவந்த போராட்டம் முடிவுக்கு வந்தது.

ஜல்லிக்கட்டு தடையை நீக்க வழி செய்யும் வகையில் அவசர சட்டம் தமிழக அரசால் இயற்றப்பட்டு, அதற்கு குடியரசு தலைவர் ஒப்புதலும் வழங்கினார். ஆனால் நிரந்தர சட்டம்வேண்டும்என்றுபோராட்டக்காரர்கள் தரப்பில் கோரிக்கைவிடுக்கப்பட்டது. அதற் கிணங்க இன்று ஆளுநர் உரைக்கு பிறகு மரபுக்கு மாறாக அதே தினத்தில் சிறப்பு சட்டசபையை கூட்டியது அரசு. ஜல்லிக்கட்டு மசோதாவை தாக்கல் செய்தார் முதல்வர் பன்னீர்செல்வம். விவாதங்களுக்கு பிறகு ஒரு மனதாக சட்டம் நிறைவேறியது.

இதையடுத்து நிருபர்களிடம் பேசிய ஜல்லிக்கட்டு போராட்டக்காரரும் இயக்குநரு மான கவுதமன் கூறியது:


ஜல்லிக்கட்டு நடத்த தேவையான நிரந்தர சட்டத்தை இயற்ற வேண்டும் என்பதே மாணவர்கள், இளைஞர்கள் கோரிக்கை. தற்போது அது நிறைவடைந்துள்ளது. எனவே இப்போது கொண்டாட வேண்டிய நேரம். மெரினா உட்பட எங்கெல்லாம் ஜல்லிக்கட்டுக்காக போராட்டங்கள் நடக் கிறதோ அங்கெல்லாம் போராட்டத்தை வாபஸ் பெறுகிறோம் என்பதை மாணவர்கள், இளைஞர்கள் ஒப்புதலோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். மாணவர்கள் மீதான தடியடி பற்றிய கேள்விக்கு பதிலளித்த கவுதமன், அவனியாபுரத்தில் என்மீதுதான் முதல் தடியடி விழுந்தது.

தடியடி நடத்தியவர்களுக்கு எதிராக புகார் அளித்துள்ளேன். மாணவர்கள் மீது தடியடி நடத்தியவர்களையும் சும்மா விடப் போவதில்லை. இப்போதைக்கு ஏறுதழுவுதல் வெற்றியை கொண்டாட முடிவு செய்துள் ளோம். ஜெயலலிதா மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றுவதை கூட நாளைக்கு நடத்தும் அரசு, இளைஞர்கள் கோரிக்கையை ஏற்று, இன்றே ஜல்லிக்கட்டு சட்டத்தை நிறைவேற்றி கொடுத்துள்ளது. இதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

இதனிடையே கவுதமன் மெரினா பீச்சில் போராட்டக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி தங்கள் போராட்டம் வெற்றி பெற்று விட்டதை தெரிவித்தார். இதையடுத்து பலரும் வீடு திரும்ப ஆரம்பித்தனர்.

– அகிலாண்டேஸ்வரி




நினைத்தாலே
முக்தி தரும்
அண்ணாமலையாரை
பிரதி மாதந்தோறும்
வரும் பௌர்ணமி
நாட்களில்
கிரிவலம் வந்து
அண்ணாமலையாரை
தரிசிக்க வரும்
பக்தகோடிகளை
பக்தியுடன் இருகரம்
கூப்பி அன்போடு
வரவேற்கிறேன்.
என்றும் பக்தியுடன்
A. மார்கபந்து
அமுதலட்சுமி ஆயில் ஸ்டோர்
நாயுடுமங்கலம் & ராணிப்பேட்டை.
திருவண்ணாமலை.
செல் : 96266 46282

பொறுப்பும் !

பொதுநலமும் !!

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

அழிவின் விளிம்பிலிருந்து நம் தாய் மண்ணையும்
விவசாயத்தையும் மீட்டெடுக்க வலியுறுத்தி

# 2வது மாநில மாநாடு

நாள் : **25-02-2017 சனிக்கிழமை**

இடம் : **சினி மியூசிசியன் மெமோரியல் ஹால்**

ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை - 26.

## மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறோம்..!



**ஆ.தே.முருகையன்**

தலைவர்



**S. கோபி**

செயலாளர்



**P.K. தனஞ்செயன்**

பொருளாளர்

திருவண்ணாமலை மாவட்டம்.

# கைக்கு எட்டும் தூரத்தில் வெற்றி

உச்சகட்ட செயல் திறனுக்கு சிறப்பான உத்திகளும் அதை செய்து முடிக்கும் திறமையும் தேவை. இன்றைய காலகட்டத்தில் உள்ள சூழ்நிலைகளுக்கு இவை பெரும்பாலும் பொருந்துமா என்ற கேள்வி எழும்.

ரிச் கார்ல்ஜிவார்டு என்னும் நூலாசிரியர், சாப்ட் எட்ஜ் என்கிற தன்னுடைய புத்தகத்தில் உத்திகளும் செய்து முடிக்கும் திறமைகளும் மட்டுமே நிறுவனத்தை மேல் நோக்கி செலுத்தாது என்று கூறுகிறார். மாறாக, மூன்றாவது காரணியாக செயல் திறன் பங்களிப்பு நன்மைகளும், புத்தாக்கமும் தேவை என்கிறார். இவை அனைத்தையும் ஒருங்கிணைப்பது வெளியில் உள்ள புற காரணிகள் அல்ல. மாறாக, நிறுவனத்தில் உள்ள கொள்கைகளும், மதிப்பு உருவாக்குதலும் மிகவும் தேவையான காரணிகள்.

வெகுவாரியான நிறுவனங் களை ஆய்வு செய்யும் பொழுது நூலாசிரியர் உத்திகளையும் செய்து முடிக்கும் திறனையும் தாண்டி மனித நேயம் என்ற ஒன்று கண்ணுக்கு தெரியாத காரணியாக வெற்றியை நிர்ணயிக்கிறது என்று நிறுவிக் காட்டுகிறார். உத்திகளில் மட்டும் உயர்வாக இருந்து பயனில்லை அதாவது சந்தைகளையும், வாடிக்கையாளர்களையும், போட்டியாளர்களையும் கண்ணுக்கு தெரிந்து வெல்வதற்கான சாத்தியங்கள் உண்டு.

உத்திகளை செயல் ஆக்கும் பொழுது அவைகளைக் காணமுடிகிறது.

ஆனால் மனிதத்தை உணரத்தான் முடியும் அந்த மனித நேயத்தை மற்றவைகளை போல புறக்கண்ணால் காண முடியாது உணர்வு பூர்வமாக உணர முடியும்.


நீண்ட நாளைய வெற்றிக்கான அடிப்படைக் காரணிகளாக பௌதிக, சமூக உணர்வு சார்ந்த காரணிகள் ஒன்று இணைய வேண்டும் என்று நூலாசிரியர் நிறுவிக் காட்டுகிறார். தரவுகளை ஆய்வு செய்ய நிதி நிலைகளை அறிந்துகொள்ள மென் பொருள்களை உபயோகித்து வன்தரவுகளை பதிவிறக்கம் செய்து விடைகளை காணலாம். ஆனால், நிறுவன வெற்றிக்கு இவை மட்டுமே சாத்தியப்படாது மனித நேயம் இல்லையென்றால் பணியாளர்கள் இணைய முடியாது.

**கூட்டு முயற்சி**

ஃபெட் எக்ஸ் *3* (Fed Ex 3) என்ற தனியார் விரைவு



அஞ்சல் சேவை தொடங்கப்பட்ட நாளில் இருந்து குழு பங்களிப்பிற்கு முக்கியத்துவம் அளித்ததை பல புத்தகங்களிலும் மேற்கோளாக கண் டிருக்கலாம். குழு உறுப்பினர்களிடையே உள்ள ஒருவருக்கொருவர் இணைந்து பணியாற்றும் பாணியே நிறுவனத்தை மேலதிக நிலைக்கு தள்ளிச் சென்றது.




எவ்வளவு விபத்துகள் நடந்த போதும் குறித்த நேரத்தில் தபால்களை சேர்ப் பித்த பாணி நிறுவனத்தை வலுப்படுத்தியது. இதன் காரணமாக டிஎன்டி என்ற போட்டி நிறுவனத்தை விலைக்கு வாங்கி அந்த நிறுவனத்தின் பணியாளர் களையும் குழு பங்களிப்பில் ஈடுபடுத்தியது. நெஸ்ட் லேப் என்ற நிறுவனத்தை கூகுள் நிறுவனம் வாங்கும் பொழுது மிகக் குறைந்த நபர்களை கொண்டு அறிவுசார்ந்த வெளிப்பாடுகள் மூலம் வித விதமான உத்திகளை கையாண்டு வெற்றிக்கு வித்திட்டது. இந்த நிறுவனம் வெற்றி அடைவதற்கும் குழு பங்களிப்பே காரணம்.

**தனித்தன்மையும் தனிச்சுவையும்**

தனித்தன்மையும் தனிச்சுவையும் நிறுவன செயல்பாட்டிற்கு மிகவும் பங்களிக்கின்றன. தரவுகளுக்கும் மனிதத் திற்கும் இணைப்பு ஏற்படுத்துவது என்பது சாதாரணமான செயல் அல்ல அறிவியல் சார்ந்த புதிய முயற்சிகளை நிறுவனத்தின் விற்பனைப் பொருட்களாக வெளியிடும் பொழுது அவை களில் தரவுகளின் தாக்கம் மட்டும் இல்லாமல் மனிதத்தின் ஈர்ப்பும் அவசியமாகிறது.

சிறந்த முறையில் செய்யப்பட்ட மிதி வண்டிகளை தனித்துவம் வாய்ந்த வகையிலும் அவரவர் சுவைக்கேற்பவும் வடிவமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மலைகளில் ஏறும் சைக்கிள்களும், பாறைகளை கடந்து செல்லும் சைக்கிள்களிலும் இந்த நிறுவனம் தனிதன்மையையும் தனிச்சுவையையும் இணைத்ததால் வெற்றியின் முகட்டிலேயே பயணிக்கிறது.

**உணர்வு பூர்வ நிகழ்வுகளின் தொகுப்பு**

நிறுவனங்களை ஒன்றிணைக்கும் பொழுது செங்கல்லும், காரையும் மட்டும் சேர்ந்தால் போதாது மாறாக, பணியாளர்களின் மனிதமும், உணர்வுகளும் இழுத்துக் கட்டப்பட வேண்டும். அவ்வாறு உணர்வுகளோடு ஏற்படக் கூடிய இணைப்புகள் பணியாளர்களை ஒன்றிணைக்கும். வெற்றிக்கு வழிகாட் டும். சில நிறுவனங்களில் நிறுவனர்கள் செய்த உணர்வு பூர்வமான செயல்களை திரும்ப திரும்ப கூறி வியந்து பாராட்டி உருகும் பொழுது இணைப்பு எளிதாகிறது. உயிர்ப்பு மேலோங்குகிறது.

மேலதிக பணிகளின் காரணமாக பொருட்கள் உற்பத்தி ஆகின்றன. இழப்புகள் தவிர்க்கப்படுகின்றன லாபம் என்ற வெற்றி எளிதில் வசப்படுகிறது. வெற்றியின் முகட்டில் தொடர்ந்து இருக்க இதுவும் சிறந்த காரணியாகும்.

**மேற்கூறிய இந்த புத்தகம் பல நிறுவனங்களிலும் ஆய்வு செய்த தரவுகளின் அடிப்படையில் எளிதான நிலையில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. தொழில் முனைவோரும் நிறு வனங்களில் உத்திகளை பயன்படுத்துவோரும், மேலாண்மை செயல்பாடுகளில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களும் முயன்று பாருங்கள்.**

- ஆர். ஜெயா

பொறுப்பும் !

பொதுநலமும் !!

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

அழிவின் விளிம்பிலிருந்து நம் தாய் மண்ணையும் விவசாயத்தையும் மீட்டெடுக்க வலியுறுத்தி

# 2வது மாநில மாநாடு

நாள் : **25-02-2017 சனிக்கிழமை**

இடம் : **சினி மியூசிசியன் மெமோரியல் ஹால்**

ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை - 26.

## மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறோம்..!



**S. ராம்குமார்**

தலைவர்



**N.P. பிரதீப்**

செயலாளர்



**R. பிரகாசம்**

பொருளாளர்

சேலம் மாவட்டம்.




## தமிழ் மண்ணின் வீர வரலாறு

# மாவீரன் மருதநாயகம்

சென்ற மாத தொடர்ச்சி.....

ஆற்காடு நவாபாக யார் இருப்பது என்பதில் சொந்தங்களான சாந்தா சாஹிபுக்கும், முஹம்மது அலிக்கும் மோதல் ஏற்பட்டது. திருச்சியை மையமாகக் கொண்டு சாந்தா சாஹிப் செயல்பட்டார்.

திறமை, குணம், தியாகம் என்ற அளவில் சாந்தா சாஹிபே தகுதியானவர் ஆயினும் பதவி வெறி பிடித்த முகம்மது அலியால் தேவையற்ற பல போர்கள் நடந்தன. மருதநாயகம் பங்கேற்ற பிரெஞ்சுப் படையின் உதவியால் ஆரம்பத்தில் பல வெற்றிகளை பெற்ற சாந்தா சாஹிப் இறுதியில் ஆற்காட்டில் 1751ல் நடைபெற்ற போரில் தோல்வியடைந்தார்.

மருதநாயகம் வீர தீரத்தோடு போரிட்டாலும், மைசூர் மற்றும் மராத்தியப் படைகளின் துணையோடு போரிட்ட ஆங்கிலேயப் படைகளை வெல்ல முடியவில்லை. பிறகு துரோகங்களால் வீழ்த்தப்பட்ட சாந்தா சாஹிபின் உடல், திருச்சி நத்தர்ஷா தர்ஹா அருகே அடக்கப்பட்டது.

### நிஜாம் - நவாப்?

இன்று கவர்னர் பதவிகளை மத்திய அரசு நியமிப்பது போல் அன்றைய முகலாயப் பேரரசில் ஔரங்கசீப் அவர்கள் பல நவாபுகளை நியமித்தார். நவாப் என்றால் பிரதிநிதி என்று அர்த்தம்.

ஆனால், இன்றைய கவர்னர்களைப் போல ஜாலியாக ஓய்வெடுக்க முடியாது. போர்க்களம் செல்ல வேண்டும், தினமும் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும், ஆட்சிப் பணிகளை கவனிக்க வேண்டும். இவருக்கு மேல் நிஜாம் என்பவர் இருப்பார். நிஜாம் என்றால் அதிபர் என்று அர்த்தம். ஹைதராபாத் நிஜாமின் கீழ்தான் கர்நாடக நவாபும், ஆற்காடு நவாபும் செயல்பட்டனர்.

### யார் ஆற்காடு நவாப்?

ஔரங்கசீப்பின் மரணத்திற்குப் பிறகு முகலாய பேரரசு தென்னிந்தியாவில்

பலகீனமடைந்தது. யாரும், யாருக்கும் கட்டுப்படவில்லை. ஒவ்வொருவரும் தங்களை நவாபுகள், நிஜாம்கள் என்று சிற்றரசர்களாக அறிவித்துக் கொண்டனர்.

தமிழகத்தில் வேலூர் மாவட்டத்தில் இருக்கும் ஆற்காட்டை தலைநகராகக் கொண்டு இயங்கிய ஆற்காடு நவாபின் அரசுதான் முதன்மையானதாகவும், பல மானதாகவும் இருந்தது. இவர்களிடம் அனுமதி பெற்றுத்தான் ராபர்ட் கிளை வின் தலைமையில் கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயரில் ஆங்கிலேயே வணிகர் களும், படையினரும் தென்னிந்தியாவில் நுழைந்தனர்.

## ஆங்கிலேயப் படையில் கான் சாஹிப்

ஆற்காடு போருக்குப் பிறகு தென்னிந் தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் செல் வாக்கும், ஆதிக்கமும் குறையத் தொடங்கி யது. அவர்கள் புதுச்சேரியையும், காரைக் காலையும் மட்டுமே தக்க வைத்துக் கொண்டனர். இந்நிலையில் பிரெஞ்சு படையில் இருந்த தளபதிகளுக்கும், கான் சாஹிபுக்கும் இடையில் சில கருத்து வேறுபாடுகள் தோன்றியது.

கோபமுற்ற கான் சாஹிப் ஆங்கிலேயப் படையில் ராபர்ட் கிளைவின் அனுமதி யுடன் இணைந்தார். தங்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் தங்களோடு இணைவதில் பெருமகிழ்ச்சி கொண்ட னர் ஆங்கிலேயர். ஆனால், அவர்தான் தங்கள் ஆட்சிக்கு பூகம்பமாக மாறப் போகிறார் என்பதை அப்போது அவர்கள் உணரவில்லை.

## வீரமும் - பரிசும்

மருதநாயகம் ஆங்கிலேயர் அணியில் இருந்த போது துரதிர்ஷ்டமாக ஒரு போரை சந்திக்க வேண்டி வந்தது. இருவரும் வீரர்கள். மோதிக் கொண்ட அவர்கள் மைசூர் சிங்கம் ஹைதர் அலியும், மருதநாயகமும் தான் என்பது வேதனையான செய்தி!

அந்தப் போர் நடைபெற்றிருக்கக் கூடாது. விதியை என்னவென்பது? திண் டுக்கல் அருகே போர் நடந்தது. இந்தப் போரில் மருதநாயகம் தோற்றிருக்க வேண்டும் என மனம் நினைக்கிறது. ஆனால் ஹைதர் அலியை தோற்கடித்தார் மருதநாயகம்! ஆங்கிலேயர்கள் பூரித்தனர். தான் யார் என்பதையும், ஹைதர் அலி யாருக்காக போராடுகிறார் என்பதையும் அறியாதகாலத்தில் மருதநாயகம் செய்த போர் அது. இதற்கு ஆற்காட் நவாபின் துரோகம்தான் பின்னணியாக இருந்தது.

நடைபெற்ற தவறுக்கு பிற்காலத்தில் பரிகாரம் தேடினார் மருதநாயகம்! மருந்து தடவினார் ஹைதர் அலி என்ற உணர்ச்சிமிகு செய்திகள் ஆங்கிலேயர் களுக்கு அப்போது தெரிந்திருக்க நியாய மில்லை.

மைசூர் சிங்கம் ஹைதர் அலியையே தோற்கடித்த தால், புகழின் உச்சிக்குப் போனார் கான் சாஹிபு மருதநாயகம். அதுபோல் திருநெல்வேலி சீமையில் ஆங்கிலேயரை எதிர்த்த பூலித்தேவனுக் கும், மருதநாயகத்திற்கும் *06.11.1759*ல் போர் நடந்தது. மருதநாயகம் முதல் தோல் வியைச் சந்தித்தார். ஆனால் தளரவில்லை. ஒரேவருடத்தில் *12.12.1760*ல் நெல்கட் டான் செவ்வல் அருகே போரிட்டு பூலித் தேவனை வென்றார்.

*1752*ல் இன்றைய கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பாக்கத்தில் பிரெஞ்சுப் படையை மருதநாயகம் வீழ்த்தியது ஆங்கிலேயரையே ஆச்சர்யப் படுத்தியது.

– தொடரும்

பொறுப்பும் !

பொதுநலமும் !!

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

அழிவின் விளிம்பிலிருந்து நம் தாய் மண்ணையும்
விவசாயத்தையும் மீட்டெடுக்க வலியுறுத்தி

# 2வது மாநில மாநாடு

நாள் : **25-02-2017 சனிக்கிழமை**

இடம் : **சினி மியூசிசியன் மெமோரியல் ஹால்**

ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை – 26.

## மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறோம்..!



**S. சரவணன்**

தலைவர்



**D. ரவி**

செயலாளர்



**P. மாரிமுத்து**

பொருளாளர்

தென் சென்னை மாவட்டம்.

பொறுப்பும் ! பொதுநலமும் !!

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

அழிவின் விளிம்பிலிருந்து நம் தாய் மண்ணையும் விவசாயத்தையும் மீட்டெடுக்க வலியுறுத்தி

# 2வது மாநில மாநாடு

நாள் : **25-02-2017 சனிக்கிழமை**

இடம் : **சினி மியூசிசியன் மெமோரியல் ஹால்**

ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை - 26.

மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறேன்



## R. கண்ணன் B.Sc.,

நிருபர் & போட்டோ கிராபர் - மக்கள் விசாரணை

**TELE PHOTO STUDIO**

MODELING PHOTOGRAPHY, CINI STILL PHOTOGRAPHY, VIDEO MIXING

New # 8/5, Old # 103/5, Ashok Nagar Main Road, Kodambakkam, Chennai - 600 024.

# 'அட்டு' திரைப்படத்திற்கு

# தேசிய விருது

அறிமுக இயக்குனர் ரத்தன்லிங்கா இயக்கியுள்ள படம் 'அட்டு'. அறிமுகங்கள் ரிஷி ரித்திக், அர்ச்சனா ரவி முக்கிய பாத்திரங்களில் நடித்திருக்கும் இப்படத்திற்கு 'குளிர் 100' படத்திற்கு இசை அமைத்த 'போபோ' சசி இசை அமைத் துள்ளார். 'ட்ரீம் ஐகான் ஃபிலிம் புரொடக் ஷன்ஸ்' நிறுவனம் சார்பில் எஸ்.அன்பழகன் தயாரித்துள்ள இப்படத்தை 'ஸ்டுடியோ-9' ஆர்.கே.சுரேஷ் வாங்கியுள்ளார். இதுகுறித்து இயக்குநர் ரத்தனலிங்கா மக்கள் விசார ணைக்கு அளித்த நேர்காணல்

''அட்டு' என்றால் பல அர்த்தங்கள் உண்டு! அதில் 'அடங்காதவன்' என்பது ஒரு அர்த்தம்!



இந்த படத்தை பொறுத்தவரையில் இப்படத்தின் கதாநாயகன் அடங்காதவன். அதனால் படத்திற்கு அட்டு என்று பெயர் வைத்திருக்கிறோம். வட சென்னையில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை பின்னணியாக வைத்து இப்படத்தின் கதை எழுதி இயக்கி யிருக்கிறோம். இப்படத்தை பார்த்தவர்கள் இங்கும் பேசும்போது இது கண்டிப்பாக வெற்றிப் படமாக அமையும் என்றார்கள். இதுவே எங்களுக்கு கிடைத்த முதல் வெற்றி யாகும். அத்துடன் இந்த கதையை தெலுங்கு, கன்னட, ஹிந்தி மொழிகளில் ரீ-மேக் செய்து தயாரிக்கவும் கேட்டு நிறைய பேர் அணுகி யிருக்கிறார்கள். இதுவும் எங்களை பொறுத் தவரை வெற்றிதான்'' என்றார்.

தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்க செயலாலர் டி.சிவாவும் இப்படத்தைப் பற்றி கேட்டபோது

'நான் இந்த படத்தை பார்த்து விட்டேன். வட சென்னை பின்னணியில் அற்புதமான ஒரு கதையை யதார்த்தமாக படமாக்கியுள்ளார் ரத்தன் லிங்கா. இந்த படம் குறித்து ஒரு வரியில் சொல்வதென்றால் இந்த படத்தின் கடைசியில் 'கி திமிலிவி ஙிசீ ஙிகிலிகி' என்று தான் போடவேண்டும். பாலா இயக்குகிற படங்கள் மாதிரி அவ்வளவு யதாரத்தமாக இந்த படத்தை இயக்கியிருக்கிறார் ரத்தன் லிங்கா'' என்றார்.

சலீம்' மற்றும் 'தர்மதுரை' போன்ற வெற்றி படங்களை தயாரித்தும், 'நடுவுல

கொஞ்சம் பக்கத்த காணோம்', 'சூது கவ்வும்', 'தங்க மீன்கள்', 'இதற்குத் தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா' உள்ளிட்ட பல வெற்றி படங்களை விநியோகம் செய்த ஸ்டுடியோ-9 நிறுவனம் புதிதாக இசை வெளியீட்டு துறையிலும் களமிறங்குகிறது.

தரமான படங்களுக்கு உறுதுணையாக இருந்து வந்த ஸ்டுடியோ-9 நிறுவனம் தற்போது தயாரிப்பாளர்களுக்கு மேலும் உதவி செய்யும் வகையில் 'ஸ்டுடியோ-9 மியுசிக்' என்கிற பெயரில் திரைப்பட பாடல்களை வெளியிடும் நிறுவனத்தை துவங்கியுள்ளது. இதன் முதல் தொடக்கமாக புதுமுகங்கள் நடிப்பில் விறுவிறுப்பான திரைக்களத்தில் விரைவில் வெளிவரவுள்ள 'அட்டு' எனும் படத்தின் இசையை விமரிசையாக வெளியிட்டுள்ளது

'ஸ்டுடியோ 9 மியுசிக்' நிறுவனம். அட்டு' படத்தை பார்த்த தயாரிப்பாளர் ஆர்.கே.சுரேஷ், "புதுப் பேட்டை', 'ரேணிகுண்டா' போன்று இந்தப் படமும் வடசென்னை மக்களின் எதார்த்த வாழ்வியலை அருமையாக படம் பிடித்துள்ளது என்றும், 'அட்டு' படத்தின் இயக்குநர் ரத்தன் லிங்கா திரைக்கதையை விறுவிறுப்பாகவும் அதே நேரம் அனைத்துவிதமான ரசிகர்களை கவரும்படியும் படத்தை இயக்கியிருக்கிறார்.." என்று கூறினார்.

மேலும், "தர்மதுரை' படத்தின் வெற்றிக்கு பிறகு வெளியாகும் இப்படம் தனது ஸ்டுடியோ-9 தயாரிப்பு நிறுவனத்திற்கு மேலும் ஒரு மகுடம் சூட்டும்" என்று நம்பிக்கையுடன் கூறினார்.

மார்ச் 3-ம் தேதி உலகமெங்கும் வெளியாக இருக்கும் இப்படத்தில் இயக்குநர் திருவண்ணாமலை மாவட்த்தைச் சேர்ந்தவர், ஒரு பத்திரிகையாளர், மக்கள் விசாரணை பத்திரிகையில் செய்தி ஆசிரியராகவும் பணி புரிந்தவர். தயாரிப்பாளர் எஸ். அன்பழகன் கதை நாயகன் ரிஷி ரித்திக் அனைவரும் மக்கள் விசாரணையில் துணை ஆசிரியர்களாக பணிபுரிந்தவர்கள். இப்படத்தில் நமது மக்கள்விசாரணையின் ஆசிரியர் ஆ. மவுரியன் இணை இயக்குநராக பணிபுரிந்திருக்கிறார். இவர்களின் கடினமான உழைப்பில் வெளிவர இருக்கும் படம் மிகுந்த பாராட்டையும், விருதுகளையும் பெறும் என்பது எதிர்பார்ப்பு கூடியிருக்கிறது.

**- கனகதுர்கா**









# கலக்கத்தில் தொழிலாளர்கள்

தமிழகத்தில் பல்வேறு வகையில் கட்டுமானப் பணி நடந்து வருகின்றது. கட்டிடங்கள் கட்டுவதற்கு வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்களுடைய பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக உள்ளது.

கட்டுமானத் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படும்போது தேவையானபாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை ஆகும். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைகளை பெறுவதற்கு டென்டர் முறையில் கட்டிட காண்ட்ராக்ட் எடுக்கும் தனி நபர்கள் வேலையை தங்கள் கைக்குள் கமிஷன் கொடுத்து வைத்துக்கொள்கின்றனர். இதனால் கட்டிட அனுமதி பெறும்போது தரமான வேலை தொழி லாளர்களின் பாதுகாப்பு முறையாக கவனிக்கப் படவில்லை. இதனால் சில நேரங்களில் பெரும் விபத்து ஏற்பட்டு பல உயிர்களின் மதிப்பு என்பது யாரும் கண்டு கொள்ளாததால் விபத்தில் பல உயிர்கள் இழப்பினால் தொழிலாளர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகின்றது.

ஒவ்வொரு நாளும் தமிழகத்தில் ஏதாவது ஒரு பகுதியில் தினசரி இரண்டு உயிரிழப்பு கட்டுமானப் பணியில் ஏற்படுகின்றது. பெரும் பாலும் இந்த விபத்து தனிநபர் வீடு கட்டும் போதும், அரசு நிறுவனத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபடும்போதும் நடக்கின்றது. இந்த நிகழ்வினை வெளியில் தெரியாமல் இருப்பதற்கு இறந்தவரின் குடும்பத்தை அழைத்து சமாதானம் பேசுவதுபோல் அந்த குடும்பத்தினரிடம் எழுதி வாங்கிக் கொண்டு கணிசமான தொகையை கொடுத்து அப்படி ஒரு சம்பவம் அந்த இடத்தில் நடக்காதது போல் மூடி மறைக்கின்றனர்.

சாதாரணமாக ஒரு குடும்ப தலைவர் இயற்கையாக நோய் வாய்ப்பட்டும் இறந்தால் வருவாய் துறை மூலமாக அவருடைய இறப் பிற்கு ரூ. 10,000 /- ( ரூபாய் பத்தாயிரம்) வழங்கப்படுகின்றது. ஆனால் தமிழக அரசின் மூலமாக தொழிலாளர் நலன் காக்க தொழிலாளர் நலச் சட்டம் உள்ளது. அதனை முறைப்படுத் திட தொழிலாளர் நலத்துற என்றும் தொழி லாளர்கள் நல வாரியம் என்றும் சுமார் 17 வகையாக நல வாரியங்கள் உண்டு. அதில் 16

# கண்டு கொள்ளாத அரசு..!

வகையான நல வாரியங்களில் *63* வகையான தொழிலாளர்களுக்கு தமிழக அரசு நிதி ஒதுக்கினால்தான் நலத்திட்ட உதவிகள் வழங்க முடியும்.

ஆனால் கட்டுமான தொழிலாளர்களுக்கு தனியாக ஒரு வாரியம் அந்த நல வாரியத்தில் *38* வகையான தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்கள் என்று வகைப்படுத்தி, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் செயல்படுகின்றது. இந்த வாரியத்திற்கு தேவையான நிதி கடந்த *1994*–ஆம் ஆண்டு முதல் *2008*–ஆம் ஆண்டு வரை தொழிலாளர்கள் பதிவு மற்றும் புதுப்பித்தல் மூலமாகவும் தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி, பொதுப்பணித்துறை போன்ற அரசு அலுவலங்கள் மூலமாக கட்டிட ஒப்பந்தம் மற்றும் கட்டிட அனுமதி வழங்கும்போது கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்கு *100*–க்கு *0.3 %* சதவிகிதம் என்ற அடிப்படையில் *2015*ஆம் ஆண்டு வரை பிடித்தம் செய்யப்பட்ட பணமும் *2015* ஆம் ஆண்டுக்கு பின் *100*–க்கு *1%* சதவிகிதம் என்ற பிடிக்கப்பட்ட தொகை ரூ. *600* கோடிக்குமேல் உள்ளது. அந்த பணத்தில் இருந்துதான் கட்டுமான தொழிலாளர்களாக நல வாரியத்தில் பதிவு செய்யும் தொழிலாளர்களுடைய பிள்ளைகள் கல்வி பயிலுவதற்கு ரூ. *1000*/– முதல் ரூ. *6000* /– ( ரூபாய் ஆயிரம் முதல் ரூபாய் ஆராயிரம்) வரை திருமண உதவி, மகப்பேறு உதவி, ஓய்வு ஊதியம், இயற்கை இறப்பு நிதி ரூ. *15,000* /– விபத்தினால் பணியின்போது இறந்தால் ரூ. *5,00,000* /– ( ரூபாய் ஐந்து லட்சம்) வெளியில் செல்லும் போது இறந்தால் ரூ. *1,00,000* /– ( ரூபாய் ஒரு லட்சம்) இறந்த தொழிலாளி குடும்பத்திற்கு வழங்குகின்றனர்.

**பாதுகாப்பிற்கான தேவையான நடவடிக்கைக்கு அரசு என்ன செய்ய வேண்டும்**

மாநில அரசின் கீழ் செயல்படக்கூடிய உள்ளாட்சி அமைப்பான மாநகராட்சி, நகராட்சி போன்ற பெரும் நகரங்களில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்குகின்றது. அனுமதி வழங்கும்போது என்னென்ன நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்று வீட்டு உரிமையாளர்களுக்கு உத்தரவு ஆணை வழங்கும்போது நிபந்தனைகள் இணைக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. அதேபோல அரசு அலுவலங்களின் புதிதாக கட்டுவதற்கும், புதுப்பிப்பதற்கும் கட்டுமானப் பணிக்கென கொடுக்கக்கூடிய விலைபுள்ளிகளுடன் பாதுகாப்பு மற்றும் என்னென்ன நிபந்தனைகளை பின்பற்ற வேண்டும் என்று கட்டுமான பணிகளில் வேலைகளை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கும்போது நிபந்தனைகள் அடங்கிய டென்டர் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு மேற்கண்ட வீட்டு உரிமையாளர்கள் மற்றும் கட்டிட ஒப்பந்ததாரர்கள் வேலைக்கு தொழிலாளர்களை அமர்த்தும் போதும், வேலை செய்யும் போதும் அவர்களுக்கான பணி பாதுகாப்பை மறந்து தொழிலாளர்களை வேலை வாங்கும் நோக்கத்தோடு செயல்படுகின்றனர்.

பணியில் இருக்கக்கூடிய தொழிலாளர்களில் யாரேனும் ஒருவரோ ஒரு பெரிய நிறுவனத்தின் வேலை செய்யக்கூடிய பல நபர்களுக்கு விபத்து மற்றும் உயிர் இழப்பு ஏற்ப்பட்டால் அந்த வீட்டு உரிமையாளரோ அல்லது கட்டிட ஒப்பந்த நிறுவனமோ உயர் இழந்தவரின் குடும்பத்தினரிடம் பேசி பணம் கொடுத்து பல சம்பவங்களை மறைக்கின்றனர்.

எந்தவொரு தொழிலாளியும் பணிக்கு அமர்த்தப்படும்போது பாதுகாப்பு கவசங்கள் வேண்டுமென்று பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டுமென்றும் கட்டிடம் நிபந்தனை அளித்த விதிகளை பின்பற்றுகின்றனரா விதிமீறல்கள் உள்ளனவா என்று சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஒருவர் கூட ஆய்வு செய்யாதது மிகவும் வேதனைக்குரியது.

தற்போது கடந்த *04.01.2017* ஆம் தேதியன்று மதுரை அரசு இராஜா மருத்துவமனையின் உள் வளாகத்தில் புதிதாக கட்டிடம் கட்டும் பணி நடந்து வருவதில் பால்ராஜ் என்ற தொழிலாளர் *6*–வது மாடியில் கண்ணாடி பொருத்தும் பொழுது தவறி விழுந்து உயிரிழந்தார். அவருடைய விபத்து இழப்பிற்கு கட்டிட ஒப்பந்ததாரர் மறைந்த தொழிலாளியின் குடும்பத்தினரையில் எழுதி வாங்கிக் கொண்டு ரூ. *1,01,000* /– (ரூபாய் ஒரு லட்சத்து ஆயிரம்) மட்டும் கொடுத்து மூடி மறைத்துள்ளனர்.

**இது போன்ற நிலையை மாற்ற அரசும், அதிகாரிகளும் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்பது கட்டுமானப் பணியாளர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.**

**– சமயசெல்வம்**

பொறுப்பும் !

பொதுநலமும் !!

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

அழிவின் விளிம்பிலிருந்து நம் தாய் மண்ணையும்
விவசாயத்தையும் மீட்டெடுக்க வலியுறுத்தி

# 2வது மாநில மாநாடு

நாள் : **25-02-2017 சனிக்கிழமை**

இடம் : **சினி மியூசிசியன் மெமோரியல் ஹால்**
ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை – 26.

## மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறோம்..!



**A. பாலசந்தர்**
தலைவர்



**S. ரமேஷ்**
செயலாளர்



**S. செல்வகுமார்**
பொருளாளர்

காஞ்சிபுரம் மாவட்டம்.



# அதிகரிக்கும் பேஸ்புக் கொலைகள்!

முன்பெல்லாம் ஒருவரை சந்திக்க, பேச நேரில் சென்றால் மட்டுமே முடியும். அந்த நிலை மாறி தொலைபேசி வந்தது, செல்போன் வந்தது. இன்று அதையும் தாண்டி சமூக வலைதளங்கள் வந்து விட்டன.

வெவ்வேறு நாட்டில் இருந்தாலும், வாட்ஸ் அப் மூலமாக நிமிடத்துக்கு நிமிடம் நமது எண்ணங்களை வேண்டியவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிகிறது. இதனால், வெளியூரில் வேலை செய்யும் தனது மகள், மகன்களிடம் பெற்றோர்களின் அதிகபட்ச உரையாடல் வாட்ஸ் அப்பில்தான். வாட்ஸ் அப்பில் ஏதாவது ஒரு மெசேஜ் அல்லது கேள்விக்கு பதில் கூறிவிட்டால் பிள்ளைகள் பத்திரமாக இருப்பதாக பெற்றோர்கள் கருதுகிறார்கள். ஆனால் அதுவே வினையாக முடியும் காலம் தொடங்கி விட்டது.

ஆம்... இது தொடர்பாக, போபாலில் நடந்த ஒரு கொலை சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேற்கு வங்கத்தை சேர்ந் தவர் அனுஷ்கா ஷர்மா (28). இவருக்கும் போபாலை சேர்ந்த உதயன் தாஸ் என்பவருக் கும் பேஸ்புக் மூலம் நட்பு ஏற்பட்டது. இது காதலாக மாறியது. அமெரிக்காவில் வேலைக்கு செல்வதாக கூறிச் சென்ற அனுஷ்கா, உதயன் தாசுடன் ஒரே வீட்டில் குடும்பம் நடத்தி உள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. ஆத்திரத் தில் உதயன்தாஸ், அனுஷ்காவை கொலை செய்து, வீட்டிலேயே புதைத்துள்ளார். அதன் மேல் கான்கிரீட் மேடை அமைத்து அதிலேயே தூங்கியிருக்கிறார்.

சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக ஒரு மாதமாக அனுஷ்காவின் செல்போன் மூலமாக அவரது பெற்றோருக்கு வாட்ஸ் அப் தகவல் அனுப்பியிருக்கிறார்.

பின்னர் ஒரு மாதமாக மகளிடமிருந்து எந்த போனும் வராததால் சந்தேகமடைந்த பெற்றோர் போலீசில் புகார் செய்த பிறகுதான் அனுஷ்கா கொல்லப்பட்டதே வெளியாகி இருக்கிறது. இதேபோல, மும்பையில் ஷீனா போரா கொல்லப்பட்ட சம்பவத்திலும் அவர் அமெரிக்காவில் இருப்பதுபோன்று அவரது சமூக வலைதள பக்கத்தில் செயல்பாட்டில் இருந்திருக்கின்றன. இதுபோன்று கொலை செய்து, இறந்தவர்களின் சமூக வலைதளங் களை செயல்பாட்டில் வைத்திருக்கும் கொலை யாளிகளை 'பேஸ்புக் கில்லர்ஸ்' என மனநல நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

உளவியல் நிபுணர் ஜெய்ரஞ்சன் ராம் என்பவர் கூறுகையில்,

'இவ்வாறு கொலை செய்பவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக கருத முடி யாது. சாதாரணமாக பழகக்கூடிய அவர்கள்



மனதளவில் இரட்டை வாழ்க்கை வாழ்பவர்கள். மனதளவில் பாதிக்கப்படும்போது, அனுதாபம், இரக்கம், வருத்தத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் கொலை செய்கின்றனர். அதை மறைக்க, பிடிபடாமல் இருக்க சடலத்துடன் வாழ்வது, சமூக வலைதளங்களை பயன்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்' என்றார்.

சிங்கப்பூரை சேர்ந்த உளவியல் நிபுணர் ஜெய்தீப் சர்கார் கூறுகையில்,

'2010ல் ஒருவர், திருமணம் செய்யாமல் தன்னுடன் குடும்பம் நடத்திய பெண்ணை கொலை செய்து, அவர் வேறொருவருடன் வெளிநாடு சென்று விட்டதாக பேஸ்புக்கில் அனுதாபம் தேடியுள்ளார். போலீசார் விசாரித்து அவரை கைது செய்தனர்' என்றார்.

இதுபோன்ற நிகழ்வுகள் மேலைநாடுகளில் அதிகளவில் நடப்பவை. தற்போது நம் சமூக அமைப்பும் கூட்டு குடும்பம் என்பதிலிருந்து விடுவிக்கப்பட்டு, தனிக் குடித்தனம், தனிமையான வாழ்க்கை என மாறுவதால் ஏற்படும் விளைவுகள் இது என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். -வீர.ஆறுமுகம் ●

# மக்கள் ஏமாளிகள் அல்ல...

## மு.க. ஸ்டாலின் ஆவேசம்..

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அதிமுக பொதுச்செயலாளராக பதவி ஏற்று கட்சியை கைப்பற்றியுள்ள சசிகலா, அடுத்து முதல்வராக பதவியேற்று ஆட்சியையும் கைப்பற்றப்போவதாக தகவல் பரவி வருகிறது.

ஜெயலலிதா வீட்டில் உள்ளவர்கள் எல்லாம் முதல்வராக மக்கள் வாக்களிக்கவில்லை என திமுக செயல்தலைவர் ஸ்டாலின் கூறியுள்ளார். அதிமுக எம்எல்ஏக்கள் கூட்டத்தில் சசிகலா முதல்வராக தேர்வு செய்யப்படுவார் என தகவல் பரவி வரும் நிலையில் ஸ்டாலினின் பேச்சு பரபரப்பை கிளப்பியுள்ளது.

இதற்காக கட்சிக்குள் உள்ள அவரது ஆதரவு நிர்வாகிகளை தூண்டிவிட்டு சின்னம்மா புகழ்பாடச் செய்து வருகிறார். செங்கோட்டையன் உள்ளிட்ட பலர் சசிகலாதான் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் அரசியல் வாரிசு என்றும் அவரே முதல்வராக பதவியேற்க வேண்டும் என்றும் தொடக்கம் முதலே கொடி பிடித்து வருகின்றனர்.

மேலும் சசிகலா இந்த மாதத்திலேயே முதல்வராக பதவியேற்க நாள் குறித்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில் இன்று நடைபெறும் அதிமுக எம்எல்ஏக்கள் கூட்டத்தில் அவர் முதல்வராக தேர்வு செய்யப்பட்டு நாளை பதவியேற்பார் என கூறப்படுகிறது. இதனால் தமிழக அரசியல் களத்தில் பரபரப்பு நிலவி வருகிறது.



இதனிடையே திமுக செயல் தலைவர் ஸ்டாலின் பிடிஐ செய்தி நிறுவனத்திற்கு பேட்டி அளித்துள்ளார்.

அதில் "போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதாவின் வீட்டில் தங்கி உள்ளவர்கள் எல்லாம் முதல்வராக மக்கள் வாக்களிக்க வில்லை.

தமிழக அரசியல் சூழ்நிலையை திமுக உன்னிப்பாக கவனித்து வருகிறது. தற்போது உள்ள சூழ்நிலையில் திமுக எந்தவொரு முடிவையும் ஜனநாயக விதிகளுக்குட்பட்டே எடுக்கும்". இவ்வாறு ஸ்டாலின் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அதிமுக எம்எல்ஏக்கள் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் ஸ்டாலினின் இந்தப் பேச்சு தமிழக அரசியலில் கூடுதல் பரபரப்பை கிளப்பியுள்ளது. சசிகலா முதல்வராக அதிமுகவினர் மட்டுமின்றி தமிழக மக்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொறுப்பும் ! பொதுநலமும் !!

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

அழிவின் விளிம்பிலிருந்து நம் தாய் மண்ணையும்
விவசாயத்தையும் மீட்டெடுக்க வலியுறுத்தி

# 2வது மாநில மாநாடு

நாள் : **25-02-2017 சனிக்கிழமை**
இடம் : **சினி மியூசிசியன் மெமோரியல் ஹால்**
ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை - 26.

## மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறோம்..!





| | | |
|---|---|---|
| **T. சசிக்குமார்** | **V. வடிவேல்** | **P. குருபாலகிருஷ்ணன்** |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

மத்திய சென்னை மாவட்டம்.

# சிந்தனை முத்துக்கள்..!



## வடிவேல் பஞ்ச்

பெரிய ஆளா வரனும்
என்ன செய்யலாம்?
டீ கடை வைக்கவா? இல்ல
வீட்டு வேலைக்கு போகவா...
ஒரே கன்ப்யூஷனா
இருக்கே...

## விவசாயி

பெத்த அம்மா
செத்தாக்கூட கண்ணீர்தான்
விடுவான். ஆனால்
பயிர் செத்தா
உயிரையே
விடுவான்.

## நச் காமெடி

இனி ஏடிஎம் களில்
தினசரி பணம் எடுக்க
நிபந்தனைகள் இல்லை!

.............................

**கவுண்டமணி :**
அடேய் பச்சில பொறுக்கி
நாலு காசு இருந்தாதானே
எடுக்க முடியும்.

**செல்தில் :**
ஏடிஎம் ..ல, காசு
இருந்தா என்ன?
இல்லைன்னா என்ன?
இனிமே, எவ்வளவு
வேணும்னானும்
எடுக்கலாம். அதான் புது
இந்தியா பிறந்திருச்சில..

## நறுக்கென்னு சொன்னாங்க

மதம் மாறினால்தான்
கடவுள் ஆசிர்வதிப்பார் என்றால்
உண்மையில் அவர் கடவுள்
இல்லை கட்சி தலைவர்

## ஆவேசம்

நாங்கள் செய்ததவறு
தமிழனாய் பிறந்ததல்ல
தகுதியில்லா
அரசியல்வாதிகளை
தேர்ந்தெடுத்தது
மட்டுமே

## எதிர்பார்ப்பு..!

தமிழ் இளைஞர்களுக்கு
தலைமை ஏற்று போராட்டத்தை
முன்னெடுக்க வேண்டும் சகாயம்
சாகயம் காட்டுவாரா?
என் இலக்கு தேர்தலோ பதவியோ
இல்லை அடுத்த தலைமுறையை
நேர்மையானதா உருவாக்க வேண்டும் என்பதுதான்
சகாயம்..!

அதுக்குதான் வாங்கன்னு
சொல்றோம்
தமிழக இளைஞர்கள்.



## மெரினா பூரட்சி தொடரனும்!

டாஸ்மாக், காவிரி உரிமை, கோக், பெப்சி தடை,
அந்நிய முதலீடு தடை, விவசாயிகள் நலன் காக்க,
செயற்கை உரம் ஒழிக்க சீமை கருவேல மரம்
அழிக்க தமிழக இளைஞர்கள்
புரட்சி தொடர வேண்டும்.

– சமூக ஆர்வலர்கள்

## புரட்சி

100 இளைஞர்களை
கொடுத்தால் இந்தியாவை
மாற்றி காட்டுகிறேன்
விவேகானந்தன்...!
அம்பானி இன்னும் 6 மாசம்
ப்ரீ டேட்டா கொடுத்தால்
உலகத்தையே மாற்றி
காட்டுவார்கள் தமிழக
இளைஞர்கள்

## தத்துவம்

தெருவில் கிடக்கும்
காகிதமாக யாரையும்
நினைக்காதே
நாளை அது புதுபட்டமாக
பறந்தால் நீயும் சற்று
நிமிர்ந்துதான் பார்க்க
வேண்டும்.



## பஞ்ச் ராதா பஞ்ச்

25 வருடம் பொய் சொல்லி பிழைப்பு
நடத்திய வக்கில் நீதிபதி ஆனால்
சட்டத்தையும், நீதியையும்
காப்பாத்துவான் நினக்கிறவன்
எவ்வளவு பெரிய
முட்டாள்.

## தப்பு பண்ணாதே

உறவுக்கு கடன் கொடுக்காதே
ஒன்று
உறவை இழப்பாய் அல்லது
பணத்தை இழப்பாய்.
பல பேர் இரண்டையும் இழந்த
கதைதான் உண்டு.

## நோ கமெண்ட்ஸ்



ஆ.மயூரியன்

7

# கருநிற காக்கிகள்

தமிழரசு தன் சட்டையின்மேல் போட்டியிருந்த சட்டையும், பேண்டையும் அவிழ்த்து அலமாரியில் போட்டுவிட்டு தண்ணீர் தெளித்து எழுப்பினான், வேலைக்காரி மீண்டும் மயக்கம் போட்டு கீழே விழுந்தாள்.

கடையில் ஷாப்பிங் செய்து கொண்டிருந்த சிட்டி கமிஷனரின் மனைவியிடம் ராஜசேகர் துணிச்சலாக சென்றான், தனது பாக்கெட்டிலிருந்த ஏ.டி.எம். கார்டை எடுத்து பாதி மூடியபடி ஐயம் ராஜசேகர் சேல்ஸ் டேக்ஸ் டிபார்ட்மெண்ட் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு கார்டை தன் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்

இந்தக் கடையில் Inclusive of All Taxes-க்கும் மேல பில் போடுறதா புகார் வந்திருக்கு நீங்க வாங்குன பொருட்களை செக் பண்ணலாமா? ஷ்யூர் தாராளமா! என்றாள் அந்த பெண்மணி.

ஒரு பக்கம் கடைக்காரர் ஒன்றும் புரியாமல் திருதிருவென்று முழித்துக் கொண்டிருந்தார், மறுபுறம் எதிர் கடையில் இருக்கும் ஆம்பலால் சேட் ராஜசேகரை கண்கொத்திப் பாம்பாக பார்த்துக்கொண்டிருந்தான்.

ராஜசேகர் அந்த பெண் மணியின் கையில் இருக்கும் பில்லை வாங்கி பரிசோதித்தான். பில்லிலும் விலை தப்புத் தப்பாக போட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். நாப்கிங், மைசூர் சண்டல் சோப், டவ் ஷாம்பு, மேரி கோல்ட் பிஸ்கட்ஸ் என பட்டியல் நீண்டு கொண்டே இருந்தது. ராஜசேகர் நினைத்தபடியே பிராவும் அதில் இருந்தது. அதை எடுப்பதற்குள் எவரிடேய் பாட்டரியை எடுத்து இது சிறிது வேண்டும் என்று கேட்டீர்களா? அல்லது பெரிது வேண்டும் என்று கேட்டீர்களா என்று கேட்டான்? நான் சிறியதுதான் எடுத்தேன் என்று சொன்னாள், பார்த்தீங்களா பெரிய பாட்டரியின் விலையே போட்டிருக்கிறார்கள் என்று பில்லைக் காட்டினான்.

ட்ரைப் புரூட்ஸ் பாக்ஸ் குவான்டிடி எவ்வளவு என்று கேட்டான்? 500 கிராம் என்று சொன்னாள். இதற்கு தர வேண்டிய இலவசத்தை உங்களுக்குத் தர வில்லை என்று எடுத்துச் சொன்னான்.

இப்பொழுது ராஜசேகர் மீது அவர்களுக்கு நம்பிக்கை வந்து விட்டது. இதுதான் சரியான நேரம் என்று ராஜசேகரும் கூடையில் இருக்கும் ப்ராவின் பேக்கை எடுத்து அந்த பெண்மணியிடம் காட்டியபடி உங்களுடையது என்ன சைஸ் என்று கேட்டான்? வெட்கத்தில் தலை குனிந்தாள். அம்பலால் சேட்டு தலை, காலெல்லாம் வியர்த்துக் கொட்டியபடி ராஜசேகரையே பார்த்துக் கொண்டிருந்தான். இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது என்று சேட்டுக்கும் கேட்கும்படி கேட்டான். இது உங்களுடையது தானே? ப்ளீஸ் என்ன சைஸ் என்று சொல்லுங்கள், அந்த பெண்மணி 26–32 என்று சொன்னாள்.

இன்னொரு ப்ரா பேக்கை எடுத்து அருகிலிருந்த இளம் பெண்ணிடம் இது உங்களுடையது தானே என்று கேட்டான்? வெட்கப்படாமல் அந்த பெண்ணும் ஆமாம் என்றாள்.

ராஜசேகர் கூச்சப்படாமல் தைரியத்தை வர வழைத்துக் கொண்டு உங்களுடைய சைஸ் என்னவென்று கேட்டான், "சேம் சைஸ்" அதை விட ஒரு இன்ச் கம்மி என்று சொன்னாள். ராஜ சேகர் புரிந்துகொண்டபடி 26–31 ஷ்யூர்? "எஸ்" என்றாள். பில்லை வெரிபிகேஷன் செய்தபடி டிக் செய்து கொண்டிருந்தான். தன் மொபைலில் ஓடிக்கொண்டிருந்த வீடியோ ரெக்கார்டரை ஆப் செய்து கொண்டான்.

இதுமாதிரி தப்பு செய்யறதுனாலதான் கஷ்ட மருக்கு 25% லாஸ் ஆகுது. இனிமே எக்ஸ்பெரி டேட் கரெக்ட்டா இருக்கா, பொருளின் விலை சரியா இருக்கா? ன்னு செக்கப் செய்து பர்சேசிங் செய்யுங்க, இந்தக் கடையைப் பற்றி வந்த செய்தி உண்மைதான். இந்த பில் எங்க கிட்டேயே இருக்கட்டும், இந்தக் கடமேல நாங்க நடவடிக்கை எடுக்கிறோம். தேங்க் யூ மேடம் என்று அங்கிருந்து புறப்பட்டான் ராஜசேகர். கமிஷனரின் மனைவி ராஜசேகரை அழைத்தாள், தனது ஹேன் பேக்கிலிருந்து விசிட்டிங் கார்டை எடுத்து ராஜசேகரிடம் நீட்டினாள், ராஜசேகர் அந்த விசிட்டிங் பார்த்தான், சேவ் அணிமல் அசோசியேஷன் செக்ரேடரி லீலா கிருஷ்ணன் என்று ஆங்கிலத்தில் இருந்தது. தேங்க்ஸ் என்று சொல்லிவிட்டு புறப்பட்டான்.

ஆம்பலால் சேட்டுக்கு வியர்த்துக் கொட்டி விட்டது. படு டேலட்டான பர்சன்தான் இவன், இவங்கிட்ட நம்ப டீலிங் வைச்சிக்கனும் என்று முடிவுக்கு வந்தான் சேட்டு.

சேட்டு கடைக்கு வந்தான் ராஜசேகர், ஆம்பலால் சேட் டீலிங்கிக்கு சம்மதம் தெரி வித்து ராஜசேகரிடம் 2 ஆயிரம் ரூபாய் நோட்டு ஒரு கட்டை எடுத்துக் கொடுத்தான்.

என்ன சேட்டு இப்ப என்ன சொல்ற, உங்க டேலண்ட்டு மேலே நம்பல்கு நம்பிக்கை வந்து டுச்சி, உங்களுக்கு "ஹெல்ப் பன்றான்" இந்த சேட் என்று சொல்ல ராஜசேகர் பணத்தை எடுத்து தன் பேக்கில் வைத்துக் கொண்டான். த பார் சேட் நாளக்கி காலயில ஷார்ப்ப 10 மணிக்கு ஓம் பொண்ணு திவ்யாவ கூட்டிக்கிட்டு ஸ்பென்சர் பிளாசா வந்தரனும், டீலிங்ல ஃபர்ஸ்ட் அட்டம்ட்டு கரெக்ட்டா வந்திடனும் என்று சொல்லிட்டு புறப்பட்டான்.

இவன் மிகப்பெரிய திறமை சாலியா இருக் கிறான், இவன் சொன்னா செய்து முடிப்பான் என்று தனக்குள் பேசிக் கொண்டான் சேட். அப்பொழுது ஆம்பலாலின் மகள் திவ்யா அங்கு வந்தாள். அழகான சந்தன நிறத்தில் மெல்லிய தாடியுடன் 6 அடி உயரமுள்ள ஒரு இளைஞன் அவள் அருகில் நின்றிருந்தான். அவனைப் பார்த்த சேட் அதிர்ச்சியானான் ....

வீட்டிலிருந்து வெளியே புறப்பட்ட தமிழரசு மயிலாப்பூர் மந்தவெளியம்மன் கோயில் அருகில் வந்தான். அவன் அங்கு வருவது புதிதல்ல. கோவில் அருகில் பூக்கடை வைத்திருக்கும் ரவி தமிழரசுக்கு உயிர் நண்பன். இருவரும் மணம் விட்டு அடிக்கடி பேசிக் கொள்வார்கள், இப்படி மணம் விட்டு பேசுவதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறான் தமிழரசு.

ஆனால் ரவி இன்று பார்த்து ஆளில்ல்லை. ரவியின் கடையில் 9 வயது சிறுவன் அருணாசலம் அங்கு இருந்தான். டாடி வெளியே போயிருக் காங்க அங்கிள், வாங்க உட்காருங்க, டாடி வந்திடுவாங்கன்னு சொன்னான் சிறுவன்.

பரவாயில்லை அருணாசலம் நான் இங்கேயே உட்காற்றேன் என்று அருகிலிருந்து இருந்த மதில் சுவர் மீது ஏறி உட்காந்திருந்தான். தெருவில் போகும், வரும் அழகான குடும்ப பெண்மணிகளைப் பார்த்து ரசித்துக் கொண்டி ருந்தான். அப்பொழுது காலை 10 மணி இருக்கும். ஒரு அழகான இளம் பெண் ரோஸ் கலர் சாரியை லோஹிப்பில் கட்டிய படி மேட்ஜிங் பிளவ்ஸ் அணிந்தபடி ஹை ஹில்ஸ் மஞ்சள் நிறக் குடையை பிடித்தபடி நடந்து வந்தாள்.

அவளின் தலைமுடி இடுப்பிற்கும் கிழே வரை நீளமாக இருந்தது, தலை நிறைய மல்லிப் பூக்கள் சரம் சரமாக தொங்கிக் கொண்டிருந் தது, உதட்டில் சிவப்பு நிற லிப்ஸ்டிக் பூசி இருந்தாள், நெற்றி வடுகில் குங்குமம் வைத்தி ருந்தாள் இதிலிருந்து அவள் திருமணமானவள் என்று புரிந்து கொண்டான் தமிழரசு. அந்தப் பெண்ணோ இடுப்பை ஆட்டியபடி தனது ஹேன் பேக்கை கீழே விழாத படி ஒரு கையில் பிடித்த படியும், மறு கையில் குடையை பிடித்த படியும், தெருவில் போகும் வரும் இளைஞர்கள் மீது தனது காந்தப் பார்வையை வீசியபடி சிலுக்கு நடையில் வந்து கொண்டிருந்தாள். தமிழரசுவின் அருகில் வந்த அந்த பெண், தனது வசீகரமான காந்தப் பார்வையை தமிழரசு மீதும் வீசினாள்.

– தொடரும்




# அமேசானுக்கு எதிராக நடவடிக்கை

தேசியக் கொடியை அவமதிக்கும் வகையில் மூவர்ண மிதியடிகள், காலணிகள் விற்பனை செய்த அமேசான் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநிலங்களவையில் மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆன்லைன் விற்பனை நிறுவன மான அமேசானின் இந்த செயல் குறித்து மாநிலங்களவையில் உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர். இதற்கு வெளியுறவு இணை அமைச்சர் எம்.ஜே. அக்பர் பதில் அளிக்கும் போது, "சர்வதேச உடன்பாடு ஏதும் இல்லாததால் இதுபோன்ற செயல்களை கட்டுப்படுத்த முடியாது. என்றாலும் தேசியச் சின்னங்களை அவமரி யாதை செய்வதை தடுப்பதற்காக 1950 மற்றும் 1971-ல் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும்.

கனடா மற்றும் அமெரிக்காவில் இவ்வாறு விற்பனை செய்யப் பட்டுள்ளது. இதுபற்றி அறிந்தவுடன் இதை தடுப்பதற்கு வாஷிங்டன் மற்றும் ஒட்டவாவில் உள்ள நமது தூதரக அதிகாரிகள் அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டனர்.

அமேசான் உரிமையாளர் ஜெஃப் பெஜோசிடம் இந்த விவகாரம் கொண்டு



செல்லப்பட்டதைத் தொடர்ந்து, அமேசான் நிறுவனம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. அமேசான் நமக்கு கடிதமும் எழுதியுள்ளது. வருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடை பெறாது என நம்பலாம்" என்றார்.

"தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக மாணவர்களுக்கு பயிற்சி மையங்கள் அதிக நெருக்கு தலை அளிக்கின்றன. இதனால் சிலர் தற்கொலை முடிவுக்கு தள்ளப் படுகின்றனர்" என்று காங்கிரஸ் உறுப்பினர் விப்ளவ் தாக்கூர் கூறினார்.

அவை துணைத் தலைவர் பி.ஜே.குரியனும் இந்த விவகாரத்தை எழுப்பினார். இதையடுத்து உறுப்பினர் களின் கவலையை தொடர்புடைய அமைச்சரிடம் தெரிவிப்ப தாக மத்திய அமைச்சர் வெங்கய்ய நாயுடு கூறினார்.

கேள்வி ஒன்றுக்கு மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் ராஜீவ் பிரதாப் ரூடி பதில் அளிக்கும்போது,

"வெளிநாடு செல்லும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் இந்திய இளைஞர்கள் போதிய தொழிற்பயிற்சி இல்லாமல் சிரமப்படு கின்றனர். உரிய தகுதி இல்லாமலும் போலி முகவர் களால் அனுப்பப்பட்டும் சுமார் 6 ஆயிரம் இந்தியர்கள் வெளிநாட்டு சிறைகளில் வாடுகின்றனர்.

இதைத் தவிக்க, பணிக்காக வெளிநாடு செல்லும் இளைஞர்கள் என்எஸ்கியூஎப் சான்றிதழ் பெறு வதை கட்டாயம் ஆக்கியுள்ளோம். நாடு முழுவதும் 100 சர்வதேச திறன் மேம்பாட்டு மையங்கள் ஏற்படுத் தப்பட்டுள்ளன. இளைஞர்களுக்கு இந்த மையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது" என்றார்.

**கடந்த ஆண்டுகளில் வால்மார்ட்**
**ஆன்லைன் வர்த்தகமும் கண்டனங்களை**
**மக்கள் விசாரணை தெரிவித்து வந்தது,**
**மத்திய மாநில அரசுகளின் அலட்சியத்தில்**
**மாட்டை கடித்து, மனுஷனக் கடித்து**
**இப்பொழுது தேசத்துக்கே தீங்கு விளைவிக்கும்**
**அளவிற்கு வந்து விட்டது முற்றிலும் சில்லறை**
**வர்த்தகத்தை அழித்து விட்ட நிலையில் வரும்**
**காலங்களில் கடுமையான பேராபத்துக்களை**
**சந்திக்க நேரிடும். எச்சரிக்கை இந்தியா,**
**குறிப்பாக தமிழ்நாடு.**

– V.அருணாசலம்


வாழ்க தமிழ்! வளர்க அன்பு!!

# மக்கள் விசாரணை

Applied in NEWS PAPER ASSOCIATION OF INDIA

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-5 பிப்ரவரி-2017 இதழ் - 9

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்

**A. மவுரியன்,** B.A.,Dip. Journilisam,

• ஆசிரியர் குழு

**A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன், காசி. அரங்கநாதன்**

• துணை ஆசிரியர்கள்

**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, V. அருணாச்சலம், வீ. வடிவேல், வீரஆறுமுகம், A. பாலசந்தர்,** காஞ்சிபுரம் **எஸ். கோபி,** காவை **சத்தியராஜ்**

• முதன்மை செய்தியாளர்கள்

**சமயசெல்வம்,** மதுரை **ராம்குமார், பிரகாஷ், பிரதீப்,** சேலம் **பாலகிருஷ்ணன், செந்தில்குமார், மனோஜ்குமார்,** கோவை **R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை **பி.கே.தனஞ்செயன், அ.மு.ரமணாத்திரி, மார்கபந்து,** தி.மலை **சசிக்குமார்,** சென்னை **குமரேசன்,** ஈரோடு **யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி **பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி **நாகராஜ்,** தூணாறு **மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை **சுசீ ஈஸ்வர்,** தென்காசி **ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம் **சிலம்பரசன்,** தர்மபுரி **செந்தில்,** தென்சென்னை **சத்தியராஜ்,** நாமக்கல்

• நிருபர்கள்

**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ் அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், எஸ்.ரமேஷ், வெங்கடேசன், விஜய், எஸ்.செல்வகுமார்**

• சட்ட ஆலோசகர்கள்

**V.K. சக்திகுமார்,** B.A.,B.L., High Court (Notary)
**T.S. சங்கர்,** M.B.A.,L.L.B.,

• புகைப்பட நிருபர் : **எம். சந்தோஷ்சிவன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS CREATIVE'S**

அலுவலகம் :

**மக்கள் விசாரணை**

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை – 600 001.
Email : mavreyan@gmail.com www. makkalvisaranai.com
Information Contact : feedback@makkalvisaranai.com
Phone : 044 - 4354 2611, 93821 33334



Press & Registration of Book Act-in ன்படி
செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள
நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

# இன்றைக்குத் தேவை பெண் சுதந்திரம்

பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் அவர்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்கு செய்யும் சூழ்ச்சியே வேறல்ல.

அந்த ஆண்மை உலகில் உள்ள வரையிலும் பெண்மைக்கு மதிப்பு இல்லை என்பதைப் பெண்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகத்தில் “ஆண்மை” நிற்கும் வரையில் பெண்ணடிமை வளர்தே வரும். பெண்களால் ‘ஆண்மை’ என்ற தத்துவம் அழிக்கப்பட்டாலல்லாது ‘பெண்மை’ விடுதலையில்லை என்பது உறுதி.

பெண்மை என்பது தெய்வீகம், இரக்கம், மென்மை, தயை, தாய்மை, பணிவு, ஆக்கம், கருணை, வன்முறைக்கு வெளியே உள்ளது. வரலாற்றிலும் அரசியலிலும் பங்களிக்காதது, முழுமையானது. வேட்கை தணிந்தது என்பன போன்ற ஆண்மை சூழ்ச்சி உத்திகளை மறுத்து ஆண்மை என்பது போன்றே அனைத்துமாகக் கூடியது.

அனைத்துமாக இருந்து வருவது, அனைத்திலும் பங்குடையது என்று கூறுவதன் மூலம் புனைவு மறுப்பு நிலையை பெண்ணியம் அடைந்து விடுகிறது. இந்தப் பெண்ணியப் புரிதல் ஆண்மையின் அனைத்துமையத் தன்மைகளையும் குலைத்து விடுவதன் மூலம் வரையறுப்பின் கொடுங்கோன்மையிலிருந்து பெண்மையை மட்டும் அல்ல ஆண்மையையும் விடுவித்திருக்கிறது. மற்றும் சொல்லாடல் தளத்தில் என்றாலும் இது எல்லாம் வல்ல பொது வழக்கின் முன்னே ஒரு புள்ளியாக நின்று இயங்கியபடி எல்லாவித ஒடுக்குமுறை, கொடுங்கோண்மை, நிர்ணய வகுங்களையும் கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கும் இது வரலாற்றின் முன்னொரு தொந்தரவூட்டும் கேள்வி இயந்திரம். இந்த வகைக் கேள்விகள் இல்லாமல் எந்த வகையான அரங்கமும் உருவாகவோ, உருமாறவோ முடியாது.

பெண் விடுதலை என்பதற்காக ஆண்கள் பாடுபடுவதும், கறுப்பின மக்களின் விடுதலைக்காக வெள்ளை மேலாதிக்கத்தினர் பாடுபடுவதும், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் பாடுபடுவதும் ‘ஏமாற்றுவதற்காகச் செய்யும் சூழ்ச்சியே தவிர வேறல்ல என்பதுவரலாற்றில் தெளிவுபடுத்தப்பட்டு விட்ட ஒன்று.


ஆனால் ஒடுக்குதல், ஒடுக்கப்படுதல் என்ற இரு நிலைகளையும் ஏற்காத ‘முரண்படும்’ தன்னிலைகள் உருவாவது என்பது இந்த இரண்டு எதிரிடைகளையும் மறுக்கும்



ஒரு தளத்தில் சாத்தியமாகக் கூடியதே.

அனைத்திற்குமே இப்படி ஒரு வியூக அடையாளம் தேவைப்படுகிறது. ஏனெனில் எல்லா விடுதலைக் கருத்தியல் களுமே அதித் தீவிர விலகுதல், அதிதீவிர மறு சீரமைப்பு என்ற தன்மைகளை உடையவை.

பெண்ணியம் ஆண்மை யைக் கட்டுடைக்கும் போது வரலாற்றில் ஆண்மை செலுத்தி வந்த அபத்தமான, அடக்கு முறையான பாத்திரம் தனது வடிவத்தை, இடத்தை இழந்து விடுகின்றன. இதனை விடுதலை என்று ஏற்பதற்கு ஆண்மையும் மறுத்து ஆண் அறம் ஒன்று தேவைப்படுகிறது.



நாம் எல்லோரும் அடிமை வயிற்றில் பிறந்து அடிமை களாய் வளர்க்கப்பட்டோம் என்பதை மறுக்கின்றீர்களா? எனக் கேட்கும் பெரியாரின் குரலில் ஆண்மையும் மறுத்த ஆண் அறம் "வெளிப்படுவதை விடுதலை கருத்தியலின் பின்புலத்தினால்தான் நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நம்பிக்கையின் மற்றொரு விஷயம் தான் 'ஆண்மை' மறுக்கும் ஆண் வழிப் புரிதல் கொண்ட ஆண்களால் ஏற்கப்படும் பெண்ணியம் நண்பர்கள் பலரும் தொடர்ந்து விவாதிக்கும், சிக்கிக் குழம்பும் ஒரு நிலைக்களும்.

பெண்ணியத்தை ஏற்கும் ஆண் அடையா ளம் அல்லது பெண்ணியத் தால் உருவாக்கித் தரப்படும் ஆண் அடையாளம் என்பது என்ன? இது சற்றே சிக்கலாகத் தோன்றினாலும் முற்றிலும் சிக்கலானது அல்ல. பெண்மை, ஆண்மை என்ற இரண்டுமே கட்டமைக்கப் பட்ட புனைவுகள் புனைவுகளை மறுத்து மாற்று அடையாளம் பெறும் ஒரு அறிதல், கருத்தியல் தளத்தில், 'அறிவியல்' மற்றும் புலன் தளத்தில் சாத்தியமாகக் கூடியதுதான். மறுத்தல், முரண்படுதல், பங்கேற்காமை, விலகுதல், அடை யாளம், துறத்தல் என்பவை அனைத்தும் 'எதர்ப்பு அரசியலின்' அறத் தந்திரங்கள் என்பது விரிவாக பிளக்கத் தேவையற்ற நிஜங்கள், அப்படியெனில் பெண்ணியம் என்பது ஆண் விடுதலைக்கும், மாற்று அரசியலுக்கும் உரிய உப அரசியல் பார்வை என்பது பொருள் படுகிறது. அதனால் தான் இன்றைய பெண்ணியம் பலவித வடிவங்களில் இயங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

**தகர்ப்பு அழித்தாக்கம், முழு மறுபரிசீலனை அரசழிப்புவாதம் என முனைப்பு கொண்ட பல தீவிர நிலைகளில் பெண்ணியம் செயல்பட வேண்டிய தேவை நேர்ந்திருக்கிறது.**

– குமரேசன்

# அட்டு திரைப்படம் சிறப்பு கவிதை



எதற்கும் அடங்காதவன்
எட்டுத் திக்கும் வசியம் செய்தவன்
வடசென்னையை
முத்தமிட்டவன்...

நட்புக்கு நாயாக
அன்புக்கு தாயாக
துரோகத்துக்கு
எமனாக இருந்தவன்...

வசதியான மனிதர்களின்
அசதியில்லா மாவீரன்...

நட்பிற்காக தன் காதலையே
தியாகம் செய்தவன்...

பிறப்பின் சம்பவமறியா
ஆளுமைக்காரன்
இறப்பின் முடிவை முன்
கூட்டியே தீர்மானித்தவன்...

துயரத்தோடு உதித்து நூலறுந்த
பட்டம்போல் தத்தளித்து
கடைசி வரை ஆசைகள்
அத்தனையும்
நிராசையாகிப்போன
மாவீரன் அட்டு....

– கவிஞர் **நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,

# பலன் பெற்றோர் பாராட்டுகிறார்கள்!



**இடுப்பு வலி** நான் கடந்த 2,3 ஆண்டுகளாக இடுப்பு வலியால் அவதிப்பட்டு வந்தேன். தாங்க முடியாத இடுப்பு வலியால் பாத்ரூமில் கூட உட்கார்ந்து எழ முடியாது. விண், விண் என்று வலி இருக்கும் எங்கும் போகமுடியாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தேன். ஸ்கேன் எடுத்து பார்த்ததில் இடுப்பு எலும்பு தேய்ந்து விட்டது என்று சொன்னார். அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றும் அதற்கு 3 லட்சம் செலவாகும் என்றும் சொன்னார்கள். அதன்பிறகு டி.வி. மற்றும், புத்தகத்தின் மூலம் விளம்பரத்தைப் பார்த்தேன். ரப்பானி வைத்தியசாலாவில் ஒரு ஆண்டாக மருந்து சாப்பிட்டேன். இப்பொழுது அறுவை சிகிச்சை இல்லாமல் 73 வயதிலேயே எனக்கு இடுப்பு வலி குணமாகிவிட்டது. தினமும் அரைமணி நேரம் நடக்கிறேன். இடுப்பு வலி இல்லாமல் நன்றாக இருக்கிறேன்.

**திரு. ராமச்சந்திரன், அம்பத்தூர், சென்னை.**



**இடுப்பு வலி** நான் கடந்த 12 ஆண்டு காலமாக இடுப்புவலி நோயினால் அவதிப்பட்டு வந்தேன். ஆபரேஷன் செய்யச் சொன்னார்கள் செய்தாலும் 50%தான் குறையும் என்று சொன்னார்கள். பிறகு டி.வி.யின் மூலம், புத்தகத்தின் மூலம் விளம்பரத்தைப் பார்த்தேன். நேரில் வந்து ரப்பானி வைத்தியசாலாவில் சிகிச்சைப் பெற்றேன். இப்போது எந்த வேதனையும் இல்லை. நல்லமுறையில் இருக்கிறேன்.

**திருமதி. கே.வி. காந்தி, அம்பத்தூர்**

**பக்கவாதம்** நான் கடந்த 7 ஆண்டுகளாக பக்கவாதத்தால் அவதிப்பட்டு வந்தேன். படுத்த படுக்கையாக இருந்தேன். என்னால் பேசக்கூட முடியாது. மும்பையில் எல்லா



பெரிய மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றும் பயன் இல்லை. பிறகு புத்தகத்தின் மூலம், டி.வி.யின் மூலம் விளம்பரத்தை பார்த்து இங்கு மருத்து சாப்பிட ஆரம்பித்தேன். ஆறு மாதத்திலேயே என்னால் நடக்க முடிகிறது. இப்பொழுது என்னால் பழைய மாதிரி எல்லா வேலைகளையும் செய்ய முடிகிறது. எல்லா இடங்களுக்கும் தனியாக நடந்து செல்கிறேன். பேச்சும் தெளிவாகி வந்து விட்டது. இப்போது எந்த குறையும் இல்லை.

**திரு. கங்காராம் மும்பை -88**

**கை, கால் வாதம், முளை வளர்ச்சிக்குறைவு, மூலம், நரம்புத்தளர்ச்சி, பாலினகுறைபாடு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற யுனானி மருத்துவர்

## டாக்டர் ஹக்கீம் S.A.சையத் சத்தார் ரப்பானி வைத்யசாலா

புது எண்.139, ப.எண். 65, டாக்டர் பெசன்ட்ரோடு, மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை -600 014. போன்: 28476969, 28470874,

பார்க்கும் நேரம்: காலை 9 மணி முதல் 2 வரை. ஞாயிறு விடுமுறை



CAPTAIN TV
திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 முதல் 9.00 வரை

வேந்தர்
காலை 10.30 முதல் 11.00 வரை

WIN TV
தினமும் மாலை 5.00 மணிக்கு

தமிழன்
திங்கள் முதல் வெள்ளி வரை - காலை 9.30 மணிக்கும், மாலை -6 மணிக்கும், புதன் மற்றும் வியாழன் - இரவு 11.00 மணிக்கு மற்றும் சனி- மாலை 5மணிக்கும்

MEGA TV
திங்கள் முதல் சனி வரை காலை 9.00 முதல் 9.30 வரை

மாதந்தோறும் டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவமாத இதழ் கடைகளில் கேட்டு வாங்குங்கள்.

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

பொறுப்பும் ! பொதுநலமும் !!

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

அழிவின் விளிம்பிலிருந்து
நம் தாய் மண்ணையும்
விவசாயத்தையும்
மீட்டெடுக்க வலியுறுத்தி

# 2வது மாநில மாநாடு

## நாள் : 25-02-2017 சனிக்கிழமை

மாலை 2 மணியளவில்

**இடம் : சினி மியூசிசியன் மெமோரியல் ஹால்**

ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை - 26.
(வடபழனி சிக்னல், கமலா தியேட்டர் அருகில்)

மாநில, மாவட்ட நிர்வாகிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் தவறாமல் கலந்துகொண்டு மாநாட்டை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.



**காசி.அரங்கநாதன்**
மாநில தலைவர்



**ஆ. மவுரியன்**
மாநில பொதுச் செயலாளர்



**அ. காதர் மொய்தீன்**
மாநில பொருளாளர்